பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா: 5.00 | பக்கங்கள்:-பத்து | Registered as a News paper in Sri Lanka

வலம்புரி
VALAMPURI

தங்கத் தரணியில்
தனியிடம் வகிப்பவர்கள்
சிறீ மாரி

நகை மாடம்
49, [187], கே.கே.எஸ். வீதி
யாழ்ப்பாணம்

சங்கு 03 | வள்ளுவர் ஆண்டு 2033 | ஆவணி 1 | சனிக்கிழமை (17.08.2002) | தொலைபேசி 3378 | ஒலி 241

# வன்னி - கிழக்குக்கான புலிகளின்

# கடல்பயணம் நாளை ஆரம்பம்

## கண்காணிப்புக்குழு அனுமதி

(முல்லைத்தீவு)

**தமிழீழ விடுதலைப்புலிகளின் கடல் வழிப் போக்குவரத்திற்கு இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அனுமதியளித்துள்ளது. முல்லைத்தீவில் இருந்து மட்டக்களப்புப் பகுதிக்கு கடல் வழிப் பயணத்தை நாளை விடுதலைப்புலிகள் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்க அனுமதிக்கப்படுவர் என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஊடகப்பேச்சாளர் ரெல்ராறோகன்ஸன் அறிவித்துள்ளார்.**

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு விடுதலைப்புலிகளின் கடல் வழி போக்குவரத்துக் குறித்து நேற்று அறிக்கையொன்றை வெளியிட்டது.

விடுதலைப்புலிகள் கடல் வழிப் போக்குவரத்தைச் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கும் வகையில் நாளை காலை 7மணிக்கு 170புலிப்போராளிகள் சிவில் உடையில் முல்லைத்தீவில் இருந்து மட்டக்களப்பு வாகரைக்கு நான்கு வள்ளங்களில் செல்லவுள்ளனர்.

நாளை மறுதினம் திங்கட்கிழமை மட்டக்களப்பு வாகரையில் இருந்து 50 புலிப்போராளிகள் சிவில் உடையில் முல்லைத்தீவுக்கு வரவுள்ளனர்.

புலிகள் கடல்வழிப் போக்குவரத்தில் ஈடுபட அனுமதிக்கப்பட்டதன் மூலம் அவ்வமைப்பு போராளிகள் ஓய்வில் தமது உறவுகளைப் பார்ப்

(10ம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்கான நிகழ்ச்சி நிரலை

## அரசாங்கம் வெளியிட வேண்டும்

### நிமால் சிறிபாலடி சில்வா கோரிக்கை

(கொழும்பு)

தாய்லாந்தில் செப்ரெம்பர் மாதம் அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளிற்குமிடையில் ஆரம்பமாகவுள்ள சமாதான பேச்சுவார்த்தை தொடர்பான நிகழ்ச்சி நிரல் உள்ளிட்ட விடயங்களை அரசாங்கம் வெளியிட வேண்டு மென்று முன்னாள் அமைச்சரும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினருமான நிமால் சிறிபாலடிசில்வா அரசாங்கத்தை கோரியுள்ளார்.

சமாதான முயற்சிகளுக்கு பொதுஜனஐக்கிய முன்னணி முழு ஆதரவை வழங்கும் எனத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்:

பொதுஜன ஐக்கிய முன்னணி

(10ம் பக்கம் பார்க்க)

## தாய்லாந்து பேச்சுவார்த்தையை அமெரிக்கா வரவேற்கிறது!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளிற்கும் அரசாங்கத்திற்குமிடையில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் தாய்லாந்தில் ஆரம்பமாகவுள்ள நேரடிப் பேச்சுவார்த்தையினை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

எதிர்வருமம் வியாழக்கிழமை ஒரு நாள் விஜயத்தை மேற்கொண்டு அமெரிக்க இராஜாங்க பிரதி செயலாளர் றிச்சாட் அமிடேஸ் இலங்கை வரவுள்ளதையடுத்து இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகம் வெளியிட்ட அறிக்கையிலேயே இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

(10ம் பக்கம் பார்க்க)

## விமான விபத்தை ஆராய சீன நிபுணர்கள் இலங்கை வருவர்

(கொழும்பு)

களுத்துறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விமான விபத்துப் பற்றி ஆராய்வதற்காக சீன நிபுணர்கள் குழு இலங்கைக்கு வரவுள்ளது.

சீனாவில் தயாரிக்கப்பட்ட வை-8 ரக விமானம் விபத்துக்குள்ளானமை குறித்து சீனவிமானக் கம்பனிக்கு அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து விமானம் வீழ்ந்து விபத்துக்குள்ளான்மை தொடர்பாக ஆராய மேற்படி விமானக் கம்பனி தமது விசேட நிபுணர்குழுவை இலங்கைக்கு அனுப்பிவைக்க முடிவு செய்துள்ளது.

விபத்துக்குள்ளான விமானம்

(10ம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீதான தடையை பேச்சுக்கு முன் நீக்கக் கூடாது

### பொ.ஐ.மு எம்.பி. மங்கள சமரவீர

(கொழும்பு)

சமரவீர அரசாங்கத்தைக் கோரியுள்

## தவறணை முகாமையாளரை கடற்படையினர் தாக்கினர்

### நாரந்தனையில் நேற்று சம்பவம்

லுடையில் தவறணைக்கு வந்த 6 கடற்படையினர் என்னை வெளியே

## பொ.ஐ.மு எம்.பி. மங்கள சமரவீர

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் விடுதலைப் புலிகள் மீதான தடையை அரசாங்கம் நீக்கக் கூடாதென்று பொதுஜன ஐக்கிய முன்னணி எம்.பி மங்கள சமரவீர அரசாங்கத்தைக் கோரியுள்ளார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே சமரவீர இக்கோரிக்கையை விடுத்தார்.

(10ம் பக்கம் பார்க்க)

# காணாமல் போனோரின் உறவினர்கள் நேற்று சிறைச்சாலைக்கு விஜயம்

## உறவுகள் எவரும் அங்கு இல்லை

(கொழும்பு)

பூசா, களுத்துறை மற்றும் காலி ஆகிய சிறைச்சாலைகளுக்கு காணாமல் போனோர் பாதுகாவலர் சங்க உறுப்பினர்கள் மற்றும் அன்னையர் முன்னணியை சேர்ந்தவர்கள் நேற்று சென்றனர்.

அங்கு 1996ம் ஆண்டுக்குப் பின்னர் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனவர்கள் எவரும் தடுத்து வைக்கப்பட்டிருக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்ற உறுப்பினர்களான என்.ரவிராஜ், எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் காணாமல் போனோர்

(10ம் பக்கம் பார்க்க)

## நாரந்தனையில் நேற்று சம்பவம்

(யாழ்ப்பாணம்)

நாரந்தனை கிழக்கிலுள்ள கள்ளுத் தவறணை ஒன்றில் கடமையில் ஈடுபட்டிருந்த முகாமையாளர் ஒருவர் கடற்படையினரின் தாக்குதலுக்கு உள்ளாகிக் காயமடைந்தள்ளார். இச் சம்பவத்தின் போது தவறணையில் கள் அருந்துவதற்காக வந்த மேலும் 7பேர் படையினரால் தாக்கப்பட்டனர்.

இச்சம்பவத்தில் நாரந்தனை வடக்கைச் சேர்ந்த லோறன்ஸ் ரவீந்திர குமார் (வயது 25) என்பவரே கடற்படையினரின் தாக்குதலுக்கு உள்ளாகிக் காயமடைந்தவராவார் இச் சம்பவம் பற்றி அவர் தெரிவித்ததாவது:

நாரந்தனை வடக்கு 8ம் கட்டை பகுதியிலுள்ள தவறணையில் முகாமையாளராகப் பணியாற்றும் நான் நேற்றைய தினம் நாரந்தனை கிழக்கிலுள்ள 103ம் இலக்க கிளையில் கடமையில் ஈடுபட்டிருந்தேன்.

பிற்பகல் 2.30 மணியளவில் சிவிலுடையில் தவறணைக்கு வந்த 6 கடற்படையினர் என்னை வெளியே வருமாறு அழைத்தனர். நான் வெளியே வந்ததும் கடற்படையினரில் ஒருவர் எனது முகத்தில் அறைந்தார்.

(10ம் பக்கம் பார்க்க)

## ஜப்பானிய நிதி நிறுவனக் குழு யாழ். வந்தது

(யாழ்ப்பாணம்)

ஜப்பானைச் சேர்ந்த நிதி நிறுவனப் பிரதிநிதிகள் குழுவினர் நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளனர்.

"செவாலங்கா" நிதிநிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ் வந்த இக் குழுவினரே செவாலங்காவின் மாவட்டப் பணிப்பாளர் எஸ்.இளங்கோ அழைத்து வந்தார்.

(10ம் பக்கம் பார்க்க)

ஹற்றன் நஷனல்

சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான கடன் திட்டம்

கடன் வழங்கும் நோக்கங்கள்

- சிறுதொழில் தொடங்குதல்
- பாதிக்கப்பட்ட தொழில் முயற்சிகளை மறுசீரமைத்தல்
- விவசாயத்திற்காக – குறுங்கால, நடுத்தரகால கடன்கள்.
- கால்நடை வளர்ப்பு
- வேறு சுயதொழில்கள்

மேலதிக விபரங்களுக்கு
HNB யாழ்ப்பாணக் கிளையை நாடுங்கள்

ஹற்றன் நஷனல் வங்கி
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

யாழ்ப்பாணக் கிளை
இல. 212, 214, ஆஸ்பத்திரி வீதி,
தொலைபேசி: 021-2787, 021-3463
தொலைநகல்: 021-3194

## சிறு விளம்பரம்

### வகுப்புக்கள்

ஆண்டு1இல் இருந்து மேற்படிப்பு வரைசிறந்த ஆசிரியர்கள் வகுப்பில் சிறுதொகை மாணவர்களுடன் ஆங்கிலத்தில் கூடிய கவனம். அனுமதிக்கு தலைமை ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி 426, (302) காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்

(5715)

### பெற்றுக் கொள்ளவும்

(கொக்குவில்)

யாழ்ப்பாணம் திறந்தபல் கலைக் கழகத்தில்எந்திரவியல் டிப்ளோமா கற்கை நெறியினைப்பயிலும் மாணவர்களுக்கானஒப்படை கள்கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவற்றை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளுமாறும் ச.ஆ.ஞானேந்திரன் தெரிவித்துள்ளார்.

# தமிழர் தேசியஇயக்க பொதுச் செயலர் சுப. வீரபாண்டியன் நேற்று பொடோ சட்டத்தின் கீழ் கைது

(சென்னை)

**தமிழர் தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் சுப. வீரபாண்டியன் பொடோ தடைச்சட்டத்தின் கீழ் சென்னை ஆழ்வார் திருநகர் பகுதியில் உள்ள அவரது இல்லத்தில் வைத்து தமிழக காவல் துறையினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.**

கடந்த ஏப்ரல் மாதம் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக அறிக்கைஒன்றை வெளியிட்டார் என்றகுற்றச்சாட்டின் பேரிலேயே இவரைத் தமிழககாவல் துறையினர் கைதுசெய்துள்ளனர்.

பூந்தமல்லி பொடோ சிறப்பு நீதி மன்றத்தில் இவரை ஆஜர்ப்படுத்திய போது 28 நாள் நீதிமன்றக்காவலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

இதேவேளை தமிழர்தேசிய இயக்கத்தின் தலைவர் பழ நெடுமாறன் கடந்த முதலாம் திகதி பொடோதடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு கடலூர்சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

இது இவ்விதமிருக்க தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகப் பேசியமை மற்றும் அறிக்கைகளை வெளியிட்டமை ஆகியகுற்றச்சாட்டுக்களின் பேரில் பொடோ தடைச்சட்டத்தின்கீழ் ம.தி.மு.க பொதுச்செயலாளர் வை.கோபாலசாமி கடந்த ஜூலைமாதம்11ந் திகதிகைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அண்மைக் காலமாக அ.தி.மு.க.அரசு விடுதலைப்புலிகளுக்கு தமிழ் நாட்டில் ஆதரவாக செயற்படுவோரை கைது செய்வதன் மூலம் தனது பழிவாங்கும் படலத்தை முடுக்கி விட்டுள்ளது.

இதன்மற்றொரு நடவடிக்கையாகவே தமிழர் தேசிய இயக்கத்தையும் தடைசெய்து புலிகளுக்கு ஆதரவாக செயற்படுவோரை மிரட்டிவருகிறது'

(உ-8)

### செல்வச்சந்நிதியில் மக்கள் வங்கி கருமபீடம்

(மந்திகை)

தொண்டமனாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய உற்சவ காலத்தில் மக்கள் வங்கியின் விஷேட கருமபீடம் இன்று முதல் 22ம் திகதி வரை இயங்கவுள்ளது.

ஆலய ஆச்சிரம மடத்தில் இயங்கவுள்ள இவ்வங்கியில் வைப்பிலிடப்பட்ட பணங்கள் மீள பெறல், புதிய சேமிப்பினை ஆரம்பித்தல் மற்றும் பரிசுத் திட்டங்கள் போன்ற சேவைகள் வழங்கப்படும்.

(இ- 23)

### விளையாட்டுப் போட்டி

(ஆனைக்கோட்டை)

ஸ்ரீநாராயணா சனசமூக நிலையமும், மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகமும் பாலர் பாடசாலையும் இணைந்துநடத்தும் முன்பள்ளி விளையாட்டு போட்டி இன்றுசனிக்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு நிலையமுன்றலில் தலைவர் கோ.நரேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (த-201)

### தடைகாண் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாணப் பாடசாலைகளில சிற்றூழியர்கள் தரம் (III)தரம்(II)அலுவலகப்பணியாளர் தரம் (I) காவலாளி, நூலகப் பணிப்பாளர்தரம் (II) விடுதி மேற்பார்வையாளர் தரம் (II) விடுதிக்காப்பாளர் மற்றும் சமையலாளர்களாகப் பணிபுரிபவர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கும் வகையில்தடைகாண் பரீட்சைகள் நடத்தப்படவுள்ளன.

இதற்கான விண்ணப்பங்களை இம் மாதம் 20ஆந் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-19)

### பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கு புனர்வாழ்வுக் கழகம், வலி வடக்கு விவசாயக் கழகம் என்பவற்றின் பொதுக் கூட்டம்இன்று பி.ப. 3 30மணிக்கு மல்லாகம் மகா வித்தியாலய மண்டபத்தில் வலி-வடக்குப் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் சு. பரமநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

வலி -வடக்கு மீள் குடியேற்றம் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இக்கூட்டத்தில் ஆராயப் படவுள்ளது. (உ)

### தபால் சேவைகள் சீரடையவில்லை

(செம்பியன்பற்று)

வடமராட்சி கிழக்கில் மாமுனை முதல் கட்டைக்காடு வரையான பிரதேசத்தில் இதுவரை 3 ஆயிரத்து 500 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன.

இருப்பினும் இப்பகுதிக்கான தபால் சேவைகள் இன்னமும் சீரமைக்கபடாதிருப்பதாகவும்,

இப்பகுதி தபாலகங்கள் தொடர்ந்தும்இடம் பெயர்ந்த நிலையில் இயங்கி வருவதாகவும் கவலை தெரிவிக்கப்படுகிறது. (உ-42

### கராட்டி சுற்றுப் போட்டி

(கொழும்புத்துறை)

'வித்து' மாணவர் சஞ்சிகை நிறுவனமானது கராட்டி சுற்றுப்போட்டி ஒன்றினை யாழ்ப்பாணத்தில் நடத்தவுள்ளது

இச்சுற்றுப் போட்டிக்கான மத்தியஸ்தர்கள் கொழும்பில் இருந்து வரவழைக்கப்படவுள்ளனர். (உ-262)

### தம்பெருமை

காட்டி எழுச்சிபெற்ற பிறகுங்கூட, தமிழர்களின் வரலாற்றையும், ஆரியரின் வரலாற்றையும் அக்கம் பக்கமாய் வைத்து விமரிசனம் செய்வதில் அக்கறை காட்டினர் என்பதும் நினைவுகூரத் தக்கதே.

### தமிழர்களின் கடமை

பல வழிகளிலும் ஏமாற்றப்பட்டு. 'தம்பெருமைதாம் அறியாப்' பேதையர்களாகித் திண்டாடும் தமிழர்களாகிய நாம், இன்றுள்ள நிலைமையில் என்னென்ன பாடங்களைப் படிக்கவேண்டும்? என்னென்ன முன்னெடுப்புகளை மேற்கொள்ள வேண்டும்? என்னென்ன குறைபாடுகளைக் களையவேண்டும்? என்னென்ன திட்டங்களை வகுக்க வேண்டும்? இப்படியெல்லாம் சிந்தித்துத் தெளியவேண்டிய இன்றியமையாமையை ஆசிரியர் சங்காதரம் அவர்களின் இப்போதைய நூலில் வரும் பத்தாம் பதினோராம் இயல்கள் திறம்பட எடுத்துப்பேசுகின்றன.

அவை ஒவ்வொன்று பற்றியும் தம் நுண்மாண் நுழைபுலத்தினால் ஊடுருவிப் பார்த்து, நம்மவர்கள தலையெடுத்து மேம்படுவதற்கான வழிவகைகளை ஆசிரியர் பரிந்துரைக்கின்றார். அப்பரிந்துரைகளில் கங்காதரம் அவர்களின் பகுப்பாய்வுத் திறமும் அறிவியற் கூர்மையும் பெரிதும் துலங்கித்தெரிகின்றன. தமிழினத்தின் தளர்வுக்கு வேற்றவர்களின் சூழ்ச்சிகள் எவ்வாறு காலாயின என்று காட்டும் முயற்சியின் போது, நம்மவர்களின் குறைகளைச் சிறுப்பித்துக்காணும் போக்கினை, நூலின் சிற்சில இடங்களிலே காணக்கூடியதாய் உள்ளது. இது அளவுக்கு மீறிய தற்பெருமைக்காய்வுக்கு நம்மவர்களை இட்டுச் செல்லவும் கூடும் என்பதை முற்றாக மறுத்துவிட முடியாது.

அது எவ்வாறாயினும், 'தம்பெருமை தாம் அறியாத்' தவ்வல்களாக நம்மவர்கள் தாழ்ந்து போய் இருப்பதனைக் கண்டு மனம் நொந்துபோன ஒருவரின் கருத்துகளை, படிப்போர் நெஞ்சங்களில் விதைப்பனவாக, இந்த அருமையான நூலின் நூற்றெழுபத்திரண்டு பக்கங்களும் உதவுகின்றன என்பதில் இருவேறு கருத்துக்களுக்குகிடமில்லை.

ஆசிரியர் கங்காதரம் அவர்கள் தம் சிந்தையிலேதோன்றும் எண்ணங்களையும் கருத்துக்களையும், வகுத்தும் தொகுத்தும் எழுதி இன்னும் இன்னும் நூல்கள் பலவற்றை நமக்குத் தொடர்ந்து தருதல் வேண்டும். பொது நலன் நாடுவோரின் வேட்கை அவ்வாறானதாய்த் தான் அமைதல் சாலும்.

(243)

### முன்பள்ளி விளையாட்டு போட்டி

(மானிப்பாய்)

வலிகாமம் தென்மேற்குபிரதேச சபை எல்லைக்குட்பட்ட வடலியடைப்பு கலைவாணி சனசமூகநிலைய முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா இன்று பிற்பகல்2 00 மணிக்கு கலைவாணி விளையாட்டு மைதானத்தில் நிலையத் தலைவர் க.தர்மராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவின் பிரதமவிருந்தினராக சர்வோதய முதுநிலை நிறைவேற்று உதவியாளர் எஸ்.வி.சங்கரப்பிள்ளை அவர்களும் சிறப்புவிருந்தினர்களாக விலிகாமம் தென்மேற்கு பிரதேசசபைதலைவர் வெ.அன்ரன் ஜோண்சன் சனசமூக நிலைய உத்தியோகத்தர் வே.கந்தசாமி ஆகியோரும் கௌரவவிருந்தினராக பண்டத்தரிப்பு பொது சுகாதார பரிசோதகர் இ.இராசதுரை அவர்களும் பங்குபற்றவுள்ளனர்.

(இ-232)

### கரவெட்டியில் பனைதறிக்கத்தடை

(மந்திகை)

கரவெட்டி கீரிப்பல்லப்பகுதியில் அனுமதிபெறாதுபனைமரம் தறித்தவர்களை விடுதலைப்புலிகள் எச்சரித்துள்ளனர்.

கடந்தசில தினங்களாக அனுமதிபெறாது பெருமளவிலான பனைமரங்கள் தறிப்பதாக அப்பகுதிமக்கள் வடமராட்சி அரசியல்துறையினரிடம் முறையிட்டதை அடுத்தே இவ்எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய சிலர் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டதுடன் பனைமரங்கள் தறிப்பதாயின் பிரதேச செயலகத்தின் அனுமதியை பெறவேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டனர்

(இ-23)

## யாழ். கிரிக்கெட் அணி இன்று மாத்தளை பயணம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுசபையின் அனுசரணையுடன் வடமத்திய மாகாண கிரிக்கெற் சங்கம் நடாத்தும் மாவட்டங்களுக்கிடையிலான கிரிக்கெற் போட்டியில் பங்குகொள்ளும் பொருட்டு 17 வயதுக்குட்பட்டோருக்கான யாழ் மாவட்ட கிரிக்கெற் அணி இன்று மாத்தளை செல்லவுள்ளது

எதிர்வரும் திங்கட்கிழமை மாத்தளை நகரில் ஆரம்பமாகவுள்ள இப்போட்டியில் மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மாவட்ட அணிகளும்கலந்து கொள்ளவுள்ளது.

யாழ். மாவட்டஅணி 19ம் திகதிமன்னார் மாவட்டஅணியுடனும், 20-ந்திகதி திருகோணமலை அணியுடனும் 21ந்திகதிவவுனியா மாவட்ட அணியுடனும் 22ந் திகதி மட்டக்களப்பு மாவட்டஅணியுடனும் மோதவுள்ளது (த)

## நல்லூரில்ஒழுங்கைப் பேண சிறப்புக்குழு அமைப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர்உற்சவகாலங்களின் போது யாழ்மாநாகர முதல்வர் ஆணையாளர் மற்றும் ஊழியர்களுடன் இணைந்து செயற்படுவதற்கென நல்லூர் பிரதேசசெயலர் தலைமையில் சிறப்புக்குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

உற்சவகால சிறப்புப் செயலணி ஒழுங்காற்றுப் பேரவை என்றபெயரில் இக்குழுவினர் இன்றுமுதல் ஆலய சுற்றாடலில் செயற்படவுள்ளனர்.

ஆலயசுற்றாடலில் இடம் பெற்றுவரும் விரும்பத்தகாத நிகழ்வுகள் நடத்தைகளைக் கட்டுப்படுத்துவதில் இவர்கள் முழுமூச்சாக ஈடுபடவுள்ளனர்.

இக்குழுவில் பிரதேச செயலாளர்கள், சட்டத்தரணிகள், வைத்தியர்கள், வர்த்தகசங்கப்பிரதிநிதிகள் பல்கலைக்கழகமாணவர்கள் கிராமஅலுவலர்கள் உட்பட மற்றும் பொதுநலன்விரும்பிகளும் இடம்பெற்றுள்ளனர்.

நேற்றுபிற்பகல் 4.00மணிக்கு நல்லூர்மங்கையற்கரசி மகாவித்தியாலயத்தில் இந்த அமைப்பின் முதலாவது நிர்வாகசபைக் கூட்டம் இடம் பெற்றது.

இவ் அலுவலகம் இன்று முதல் நல்லூர்ஆலயசுற்றாடலில் இயங்கவுள்ளது.

(த)

## மடு சென்ற பக்தர்கள் அடிப்படை வசதிகளை நிறைவேற்ற அலைச்சல்

(உடுவில்)

பலலட்சக்கணக்கான யாத்திரிகர்கள் கூடியிருக்க மருதமடுஅன்னையின் திருநாள் திருப்பலி ஒப்புக் கொடுக்கப் பட்டது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்நிகழ்வில் பாப்பரசரின் பிரதிநிதி அதிமேற்றிராணியார்தோமஸ்ஜெரோஸ் மற்றும் பல்வேறுமறைமாவட்டங்களைச் சேர்ந்த ஆயர்கள் பங்குத்தந்தையர்கள், கன்னியாஸ்திரிகள்கலந்து கொண்டனர்.

இப்போது நிலவுகின்ற சமாதானச் சூழல் காரணமாக முன்னெப்போதும் இல்லாதவாறு தென்பகுதி சிங்கள யாத்திரிகர்கள் பலரும், கண்டி வீதி திறக்கப்பட்டுள்ளதால் யாழ்ப்பாண மக்களும் பெருமளவில் கலந்து கொண்ட இத்திருநாள் திருப்பலி அதிகாலை 6. 25க்கு ஆரம்பமானது அதனைத்தொடர்ந்து திருச்சொரூப பவனி இடம் பெற்றது.

இதேவேளை, பெருமளவு மக்கள் கலந்து கொண்டதால அவர்களுக்கு போதுமான நீர்வசதிகளோ, மலசலகூட வசதிகளோ, உணவு வசதிகளோ காணப்படவில்லை. இதனால் இவற்றை நிறைவேற்றுவதற்கு மக்கள் வீதிகளில் அலைந்து திரிந்ததை காணக்கூடியதாக இருந்தது. ஆலயச்சூழலில் தமிழீழ காவல்துறையினர் ஒழுங்கு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததையும் அவதானிக்க முடிந்தது. (உ- 261)

# பல்லின சமுதாயங்கள் வாழ்கின்ற இந்த நாட்டில் பெரும்பான்மை, சிறுபான்மை பேதம் ஏற்றதல்ல

## வத்திக்கானில் இருந்து வருகை தந்த ஆயர் மேதகு மல்கொம்ரஞ்சித்

(தென்மராட்சி)

**பல்லின சமுதாயங்கள் வாழ்கின்ற இந்த நாட்டில் பெரும்பான்மை சிறுபான்மை என்ற நிலைப்பாடு ஏற்கக் கூடியதல்ல; இங்கு வாழ்கின்ற மூவின மக்களுக்கும் தனித்துவம உண்டு. அவை மதித்துப் போற்றப்படவேண்டியவை சமாதான, சகவாழ்வுப் பயணத்தில் இந் நிலைப்பாடு அவசியமானதும் முக்கியமானது மாகும்.**

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்த வத்திக்கானைச்சேர்ந்த ஆயர் மேதகு மல்கொம் ரஞ்சித், யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர்களுடன் நடத்திய கலந்துரையாடலின் போது இவ்வாறு தெரிவித்தார்.

யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் அ. நல்லதம்பி தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் ஆயர் மல்கொம்ரஞ்சித் மேலும் குறிப்பிடுகையில்,

அரசாங்கத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வரவேண்டும் என்பதற்காக நான் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக பாடுபட்டு வருகின்றேன். இது மிகவும் கஷ்டமான பணியாக இருந்து வந்துள்ள போதிலும் நாட்டில் யுத்தம் நிறுத்தப்பட்டு, சமாதானம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக நாம் மிகவும் கடுமையாக உழைத்ததன் பேரில் தான் இன்று இந்த மாற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

சமாதானப் பணி என்பது இலகுவானதல்ல. இதில் பல்வேறு எதிர்ப்புக்கள் தோன்றும். இருப்பினும்முழு நாட்டினதும் நலனுக்காக நாம் அவற்றினைத் தாங்கிக் கொள்ள வேண்டும்.

கடந்த 25 வருடங்களாக இடம்பெற்று வந்த யுத்தத்தின் மூலம் ஆயுத வியாபாரிகள் மேன்மேலும் செல்வந்தர்களாகியுள்ளனர்.

அதேவேளை, எமது மக்கள் அனைவரும் மிகவும் பாதிக்கப்பட்டுவிட்டனர். சமாதானம் அவசியம் ஏற்பட வேண்டும். கடந்த காலங்களில் ஜனநாயகம் தப்பாக விளங்கிக் கொள்ளப்பட்டதால், ஜனநாயகப் பண்புகள் பேணிக் காக்கப்படவில்லை;

நாட்டில் கலாசார அரசியல் பேதங்கள் இல்லாது ஒழிக்கப்படல் வேண்டும். நாட்டில் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டினையும் கட்டிக் காக்க நாம் முனையவேண்டும். தாய்லாந்தில் அரசுக்கும் புலிகளுக்குமிடையில் பேச்சுவார்த்தை ஆரம்பமாக இருப்பது நல்லஅறிகுறியாகும் இது விடயத்தில் இருபகுதியினரும் புரிந்துணர்வுடனும். விசுவாசத்துடனும் ஈடுபடவேண்டும் அவ்வண்ணம் அவர்கள் ஈடுபடுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர்வடபகுதிக்கு பெரும் எண்ணிக்கையான தென்பகுதி மக்கள் வருகை தருவது நல்ல வரவேற்கக் கூடிய விடயமாகும். இன்னும் அதிகளவில்மக்கள் வரல் வேண்டும்.

யுத்தத்தின் போது இங்கு ஏற்பட்ட அழிவுகள். சேதங்களை நேரில் பார்வையிட வேண்டும். அதன்மூலம்கடந்த 25 வருடங்களில் வடபகுதி மக்கள் அனுபவித்த துன்பியல் சம்பவங்களை தென்பகுதியினரை உணரும் வாய்ப்பைப் பெறுவர் எனக்குறிப்பிட்டார்.

கியுடெக் நிறுவனத்தின் பணிப்பாளர்வணபிதா சீ ஜீ ஜெயக்குமார் அடிகள் அங்கு குறிப்பிடுகையில்;

சமாதானத்தின் உச்சப் பலனை எமது மக்கள் அனுபவிக்க வேண்டும். அப்போது தான் சமாதானத்தின்மகிமை மக்களால் உணரப்படும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் சில ஓட்டைகள் காணப்படுகின்றன. அவை சீர்படுத்தப்படல் வேண்டும் என்றார்.

யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் எஸ். பரமநாதன் அங்கு கூறுகையில்:

வலிகாமம் வடக்கு, தென்மராட்சி பிரதேசங்களில் இடம் பெயர்ந்த மக்கள் இன்னமும் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை. வலிகாமத்தில் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் 58 6 மைல் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது எமது பிரதேசத்தில் உயா பாதுகாப்பு வலயம் இன்னமும் ஏன் இருக்க வேண்டும். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ இங்கு வந்த சமயம், பனை, தென்னை மரங்கள் வெட்டப்படக் கூடாது எனப் பணிப்புரை வழங்கியிருந்தார்.

ஆனால், பனை, தென்னை மரங்கள் இன்றும் வெட்டப்பட்டே வருகின்றது. உத்தரவுகள் படையினரால் மீறப்படுகின்றன. இந்த நிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் இருப்பதால் யாது பயன்? என்ற கேள்வியே எமது மக்கள் மத்தியில் இருந்துவருகின்றது என்றார்.

ஆயர் மல்கொம் றஞ்சித்துடன் செடெக் நிறுவனத்தின் இலங்கைப் பணிப்பாளர் டேமியன் பெர்னாண்டோ, இரத்தினபுரி பங்குத்தந்தை வண. பிதா ரஞ்சன் மல் மொறாயஸ் ஆகியோரும் வருகை தந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (உ-77,6)

## நெடுந்தீவு ஆஸ்பத்திரியின் நிலையைகவனிப்பாரில்லை

(நெடுந்தீவு)

நெடுந்தீவு வைத்தியர் சாலையில் கடமையாற்றி வந்த வைத்தியர் மற்றும் தாதிகள் விடுமுறையில் சென்றுள்ளதால் அங்கு செல்லும் நோயாளர்கள்பெரும் சிரமங்களுக்கு ஆளாகி ஏமாற்றத்துடன்திரும்பி வருகின்றனர் இதேவேளை, மேற்படி வைத்தியசாலை பெயரளவில் மட்டுமேஇயங்கி வருவதாகநீண்டகாலமாகவே இப்பகுதி மக்கள்கவலை தெரிவித்துவருவது குறிப்பிடத்தக்கது. (உ-249)

## புலிகளுடன் இணையச் சென்ற பாடசாலை மாணவன் பெற்றோரிடம் ஒப்படைப்பு

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைவதற்காக சென்றபாடசாலை மாணவனை விடுதலைப்புலிகள் நேற்றுமுன்தினம் பெற்றோரிடம்திருப்பி ஒப்படைத்துள்ளனர்.

மட்டக்களப்பு மெதடிஸ் மத்திய கல்லூரி மாணவன் ஒருவர், மட்டுகல்லடி அரசியல் துறை அலுவலகத்துக்கு இயக்கத்தில்இணையும்பொருட்டுச் சென்றவேளை.

இம் மாணவன் 18வயதுக்கு கீழ்ப்பட்டிருந்தகாரணத்தால் மட்டக்களப்பு நகர அரசியல் துறை பொறுப்பாளர் சேனாதி, தாமரைக் கேணி அரசியல்துறை செயலகத்தில் வைத்து போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் முன்னிலையில்பெற்றோரிடம் ஒப்படைத்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் தமது இயக்கத்தில் 18 வயதுக்கு குறைந்த சிறார்களை இணைத்துக்கொள்வதில்லை என உறுதியளித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## வாழ்நாட்பேராசிரியர்பட்டம் அமைச்சர் ஜயலத்துக்கு ஐரிஸ் பல்கலை வழங்கியது

(கொழும்பு)

புனர்வாழ்வு புனரமைப்பு அகதிகள், மீள குடியேற்றுகை அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனாவுக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் ஐரிஸ் சர்வதேச பல்கலைக்கழகம் (Irish International University )வாழ்நாட் பேராசிரியர் என்ற கௌரவப்பட்டத்தினை வழங்கியுள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி லண்டனில் உள்ள மேற்படி பல்கலைக்கழகத்தில் இக் கௌரவப் பட்டமளிப்பு விழாநடைபெறவுள்ளது. (உ)

## வல்லைப் பாலத்தின் இரு மருங்கிலும்'படையினர் முட்கம்பி வேலி அமைப்பு

(நெல்லியடி)

வல்லைப்பாலத்தில்இருமருங்கிலுமுள்ள கடல்பகுதியில் முட்கம்பிவேலி களைஅமைப்பதில்படையினர் அண்மைக் காலங்களில் முனைப்புடன் ஈடுபட்டுவருகின்றனர்

இதனால்அப் பகுதியில்மீன்பிடித் தொழிலில்ஈடுபடுவோர் பெரும் சிரமங்களுக்கு ஆளாகின்றனர்.

அத்துடன், மாரிகாலப் பகுதியில் இறால் பிடிப்புக்கு பெயர்போன இடமாக இப்பகுதி விளங்குவது குறிப்பிடத்தக்கது. (உ-247)

## விபத்து

(உடுவில்)

மிக வேகமாகச் சென்ற தனியாருக்குச் சொந்தமான பிக்கப் வாகனம் பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் அதனை ஓட்டிச் சென்ற சாரதியும், இன்னொருவரும் படுகாயங்களுக்கு உள்ளானார்கள்.

இச்சம்பவம் கடந்த 11 ஆம் திகதி இரவு மன்னார் வீதியில் ஆண்டான் குளப் பிரதேசத்தில் இடம்பெற்றது. (உ-261)

## கூரை பிரித்து திருட்டு

(உடுவில்)

கூரையைப் பிரித்து வீட்டினுள் நுழைந்த திருடர்கள வீட்டிலிருந்த நகைகள், உடுபுடைவைகள், பணம், சைக்கிள் என்பவற்றை திருடிச் சென்றனர்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு சுன்னாகம் தெற்கு சபாபதிப்பிள்ளை வீதியிலுள்ள க நித்தியகுமார் என்பவரது வீட்டில் இடம்பெற்றுளளது.

உறவினர்களது வீட்டிற்கு அனைவரும் சென்றிருந்ததை பயன்படுத்தி இத்திருட்டு இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-261)

## ட்ரோஜனத்துப் பெண்கள் நாடக ஆற்றுகை

(யாழ்ப்பாணம்)

பறிபிடீஸின்''ட்ரோஜனத்துப் பெண்கள்'' கிரேக்க நாடகம், சிங்களத்தில் தர்ம சிறி பண்டாரநாயக்கவின் நெறியாள்கையில்இம் மாதம் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 3.00மணிக்கு யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலையில் நடைபெறவுள்ளது. (உ)

## விளையாட்டுப் போட்டி

(வட்டுக்கோட்டை)

வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால் இயக்கப்படும்கஜமுகன் முன்பள்ளி விளையாட்டுப்போட்டி எதிர்வரும்19ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 2.00 மணிக்கு வலிகாமம் மேற்கு பிரதேசசபை மைதானத்தில்ஸ்.பேபிறோசா அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி-மேற்கு பிரதேச சபைத்தலைவர் வே. மகேந்திரன் கலந்துகொள்ளவுள்ளார். (உ-216)

## கரித்தாஸ்- கியூடெக் ஏற்பாட்டில் சுற்றுச் சூழல் முகாமைத்துவப்பயிற்சி பட்டறை நேற்று ஆரம்பமானது

(ஈச்சமோட்டை)

இலங்கை கரித்தாஸ்—யாழ். கியூடெக் நிறுவனங்களின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம், திருநெல்வேலி விவசாயப்பயிற்சி நிலையத்தில் சுற்றுச் சூழல் முகாமைத்துவ பயிற்சிப் பட்டறை நடைபெற்று வருகின்றது.

நேற்று ஆரம்பமான திருமலை, மட்டுநகர், மன்னார், யாழ்ப்பாணம், வன்னிப் பகுதிகளிலுள்ள இணைப்பாளர்கள், ஊக்குவிப்பாளர்களுக்கான இப்பயிற்சிப்பட்டறையில் வீட்டுத்தோட்டம், மண்வளம் ஒருங்கிணைந்த விவசாயம், உயிரியல் வளம் பேணுதல், இரசாயனப் பாவனையின் தாக்கம், சூழல் மாசடைதலும் அதைத்தடுக்கும்முறைகளும், உயிரியல் பீடைநாசினிப் பாவனை ஆகியவற்றுக்கான தேர்ச்சி பெற்றோரின் விரிவுரைகளும் குழு நிலைக் கலந்துரையாடல் வெளிகளப் பயிற்சியும் இடம்பெறுகின்றன.

இவ்வாறு பயிற்சி பெறுபவர்கள் கிராம மட்டத்தில் விவசாய நடவடிக்கைகள் பற்றிய அறிவை மக்களுக்கு வழங்கவும் தொழில் வாய்ப்பு, தன்னிறைவு போன்றவற்றை அடைய வழி காட்டவும் பயன் படுத்தப்படவுள்ளதாக கியூடெக் வட்டாரங்கள் தெரிவித்தன. இப்பட்டறையானது எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை வரை இடம்பெறவுள்ளது. (உ-59)

# ஜனாதிபதியின் அதிகாரம் குறைப்பு இல்லையேல் பாராளுமன்றம் கலைப்பு இதுவே பிரதமர் ரணிலின் இலக்கு

பாராளுமன்றக் கலைப்புத் தொடர்பான பயப்பீதி ஐக்கிய தேசிய முன்னணி அரசிடம் இருந்து அகன்றபாடாக இல்லை. அண்மையில் நாட்டு மக்களுக்கு உரையாற்றிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க புதியதொரு தேர்தல் நடத்தப்படுமாயின் அதனை நாடு தாங்கமாட்டாது. பொருளாதாரமும் அதல பாதாளத்திற்குச் சென்றுவிடும். இதனால் பாராளுமன்றத்தைக் கலைக்கும் எண்ணம் தம்க்குத் துளிகூடக் கிடையாது என்றார்.

சோழியன் குடுமி சும்மா ஆடது என்பதை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடி பிடித்து அறிந்துகொண்டார். தனது நடவடிக்கைகளையும் முடுக்கி விட்டுள்ளார். அதனை நிரூபிக்கும் வகையில் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களைக் குறைக்கும் அரசியல் யாப்புச் சீர்திருத்தச் சட்ட நகலை அடுத்த மாத முற்பகுதியில் பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தும்படி தனது நம்பிக்கைக்குரிய சகாக்களுக்குப் பணித்ததுடன் அதற்கென்று விசேட குழு ஒன்றையும் நியமித்தார். அரசியல் யாப்புத் திருத்தச் சட்ட நகலை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்குத் துரித கதியில் செயற்படுமாறு அமைச்சர்களுக்குப் பணித்ததானது பாராளுமன்றக் கலைப்புத் தொடர்பான அச்சம் பிரதமர் ரணிலைச் சூழ்ந்துள்ளதைச் சுட்டி நிற்கிறது. இதில் வேடிக்கை என்னவெனில் பிரதமர் ரணில் பதவிக்கு வந்ததும் ஜனாதிபதி மீது குற்றப் பிரேரணை ஒன்றைக்கொண்டு வந்து- பதவியிலிருந்து தூக்கி எறியத் திட்டம் தீட்டினார். ஆனால் அது நிறைவேறாமல் போகவே பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அரசியல் யாப்பு திருத்தச் சட்டத்தை நிறைவேற்றி அதன் மூலம் ஜனாதிபதிக்குள்ள நிறைவேற்று அதிகாரத்தையும் துண்டாடத் திட்டம் வகுத்தார்.


### பெரும்பான்மைப் பலம் பாராளுமன்றில் கிடைக்குமா?

அரசியல் யாப்புச் சீர்திருத்தச்சட்ட நகலை பாராளுமன்றில் நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை அரசுக்குத் தேவைப்படுகிறது. 225 பாராளுமன்ற உறுப்பினர்களில் 131 பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெறக்கூடியதாக இருக்கின்றபோதிலும் எதிர்க் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் 19 பேரை வளைத்துப்பிடிக்க வேண்டிய தர்ம சங்கட நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது.

இந்த அரசியல் சதுரங்கத்தில் பிரதமருக்கு இரண்டே இரண்டு வழிகள்தான் உண்டு. ஒன்று எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களை விலை கொடுத்து வாங்கி அரசியல் யாப்புத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுதல். மற்றது ஜனாதிபதியிடம் மண்டியிடுவது. இதனைத் தவிர பிரதமருக்கு மாற்று வழிகள் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த நிலையில் எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களைப் பேரம்பேசும் முயற்சியில் அரசு தீவிரமாக ஈடு

## தலையிடிதரும் உள்ளூராட்சித் தேர்தல் காலைவாரக் காத்திருக்கும் ஹக்கீம்

பட்டுள்ளது. பேரம்பேசும் முயற்சியில் வெற்றி பெற்று 19 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் அரசியல் யாப்புத் திருத்தச் சட்டமூலம் நிறைவேற்றப்படுமாயின் ஆதரவளித்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவி பறிபோகாமல் இருப்பதற்கும் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்படுவது அவசியமான தேவையாகும்.



### பாராளுமன்றைக் கலைக்குமாறு ஐ.தே.மு தீர்மானிக்கலாம்

பெரும்பான்மைப் பலத்தைப் பெறமுடியாது போகும் பட்சத்தில் அடுத்த கட்ட நடவடிக்கையாகப் பாராளுமன்றத்தைக் கலைக்கும் தீர்மானத்தை அரசு கொண்டுவரும். அவ்வாறு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டாலும் கூட தீர்மானத்தை ஜனாதி



பதியிடம் சமர்ப்பிக்கவேண்டும். பாராளுமன்ற கலைப்புத் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலில் ஜனாதிபதி கையொப்பமிட வேண்டும்.

இந்த நிலையில் பாராளுமன்றம் கலைப்பது தொடர்பான தீர்மானத்தை எடுத்தாலும் கூட ஜனாதிபதி தனது தற்துணிவின் பேரில் நாடாளுமன்றத்தைக் கலைக்காமல் விடமுடியுமென அரசியலமைப்பு சட்ட நிபுணர்கள் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர்.

அத்துடன் பாராளுமன்ற கலைப்புத் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலில் ஜனாதிபதி தனது கையொப்பத்தை இடுவதற்கு மறுப்புத் தெரிவிப்பின் பாராளுமன்றக் கலைப்புத் தீர்மானம் செல்லுபடியற்றதாகும் எனவும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். இதனை உற்று நோக்கும்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியிடம் மண்டியிடுவதைத்தவிர வேறு வழியில்லை. இதனை உறுதிப்படுத்துவது போல் தற்போது ஜனாதிபதிமீது அபத்தமான குற்றச்சாட்டுக்களைக் கூறுவதையோ அல்லது விதண்டாவாதம் பேசி ஜனாதிபதியை மேலும் சீற்றமுறச் செய்வதையோ ஐக்கிய தேசிய முன்னணி அமைச்சர்கள் தவிர்த்து வருகின்றனர்.

### நிபந்தனை போடுகிறது முஸ்லிம் காங்கிரஸ்

இவை ஒரு புறத்தில் நடக்க மறுபுறத்தில் முன்னணி அரசை குலைநடுக்கத்திற்குள் தள்ளி விட்டிருக்கிறது. அரசின் பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சங்கடமான நிபந்தனை.

அதாவது வடக்குக் கிழக்கு மாகாணங்களில் ஒத்திவைக்கப் பட்டுள்ள உள்ளூராட்சித் தேர்தலை செப்ரெம்பர் 25இல் நடத்தியே தீரவேண்டுமென ஒரு போடு போட்டிருக்கிறார் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம். தேர்தல் நடத்தப்பட வேண்டும். இல்லையேல் அரசுக்கான ஆதரவை முஸ்லிம் காங்கிரஸ் விலக்கிக்கொள்ளும். இந்த அறிவிப்பு பிரதமரின் தலையில் பேரிடியாக விழுந்துள்ளது.

சமாதான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்

**டொறிங்ரன்**

இச்சந்தர்ப்பத்தில் பாராளுமன்றத் தேர்தலோ அல்லது உள்ளூராட்சித் தேர்தலையோ நடத்துவதற்கு எத்தனிப்பது ஒரு புறத்தில் விடுதலைப் புலிகளின் எதிர்ப்பைச் சந்திக்க நேரிடுவதுடன் சமாதான முயற்சியையும் பாதித்துவிடும். இதனை உறுதிப்படுத்துவது போன்று வடக்குக் கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த வேண்டாமென தமிழ் கூட்டமைப்பினர் கோரி வருகின்றனர்.


இந்த நிலையில் தேர்தலை நடத்தி விடுதலைப் புலிகளின் எதிர்ப்பைச் சம்பாதிப்பதா? அல்லது தேர்தலை நடத்தாமல் விடுவதன் மூலம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவை இழப்பதா? என்ற சிக்கல் பிரதமருக்கு ஏற்பட்டுள்ளது. எதுவாயினும், பிரதமர் ரணிலும் ஜனாதிபதியும் தமக்குள் பிடுங்குப்பாடில்லாமல் இருக்க வேண்டுமாயின் புரிந்துணர்வு ஒப்பந்தம் அவசியமானதாகும்.

### ஆளுங்கட்சியை தீர்மானிப்பது முஸ்லிம் காங்கிரஸே

பொது ஜன ஐக்கிய முன்னணியாக இருந்தாலென்ன ஐக்கிய தேசிய முன்னணியாக இருந்தாலென்ன எந்தக்கட்சி ஆட்சிப்பீடமேறினாலும் சுக்கான் பிடிப்பது தானாகவே இருக்க வேண்டுமென்பது முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமின் இறுமாப்பான சபதம். முஸ்லிம் காங்கிரசின் உதவியின்றி எந்தக் கட்சியும் ஆட்சிக் கட்டிலை நகர்த்த முடியாது என ரவூப் ஹக்கீம் சூளுரைத்துமுள்ளார். இதனை உற்று நோக்கும்பொழுது வடக்குக் கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலை பிரதமர் நடத்தாதுவிடின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பதில் நடவடிக்கையில் இறங்கும் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை.

இதில் ஆட்சிக் கட்டிலில் இருந்து சரியவும் பிரதமருக்கு அறவே விருப்பமில்லை. மறுபுறத்தில் சமாதான முயற்சிகள் பின் தள்ளப்படுமாயின் சர்வதேச நெருக்குதல்களில் இருந்து தப்புவதும் பிரதமரால் முடியாத காரியம். இவற்றால் பிரதமருக்கு இது சோதனை நிறைந்த காலமாகவே அமையப் போகின்றன.

இந்த சங்கட நிலைகளில் இருந்து சற்றேனும் விடுபடுவதற்கு ஜனாதிபதி சந்திரிகாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வதன் மூலம் மூச்சு விடுவதற்கு சற்று நேரம் கிடைக்கும் என்பது பிரதமரின் கணிப்பு. பராளுமன்றத்தை கலைக்கமாட்டேன் என கூறிய ஜனாதிபதியுடன் புரிந்து



ணர்வு ஒப்பந்தத்தைச் செய்வதன்மூலம் ஆட்சிக் கவிழ்ப்புக்கு அறை போட்டுவிட முடியும் எனப் பிரதமர் ரணில் கருதுகிறார். இதேவேளை இந்த ஒப்பந்தத்தைச் செய்து கொள்வதன் மூலம் தனது கட்சிக்கு தாவுவதற்குக் காத்திருக்கும் பொது ஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்களை இழந்துவிடும் நிலை ஏற்பட்டுவிடுமோ என்ற ஏக்கமும் பிரதமருக்கு ஏற்படவே செய்கிறது.

# தம் பெருமை அறியாத் தமிழர்களுக்கு அறிவுரை கூறும் நூல் வித்தும் விழுதும்



| | |
|---|---|
| நூல் | : வித்தும் விழுதும் |
| ஆசிரியர் | : ம. கங்காதரம் |
| வெளியீடு | : மங்கை வெளியீடு |
| பக்கங்கள் | : 176 |
| விலை | : ரூ.100 |

சரசாலை ம.கங்காதரம் அவர்கள் தலைசிறந்த கணித பௌதிக ஆசிரியர். உயர்வகுப்பு மாணவர்களுக்குப் பயன்படும் பொருட்டுத் தமிழ் மொழியிலே பாடநூல்களை இயற்றி வெளிடும் முன்னோடி முயற்சியில் ஈடுபட்ட ஒருவர். விஞ்ஞான நோக்கும் பகுத்தறிவுப் பார்வையும் படைத்த அவர் இனப்பற்றும் மொழிநல ஈடுபாடும் கொண்ட சிந்தனையாளராகவும் திகழ்கிறார். ஏலவே, அவர் தமிழ் எழுத்துக்களின் ஒலி இயல்பு பற்றியும் வரிவடிவு பற்றியும் பரிசீலனை செய்து, தமிழ் எழுத்துக்கள் என்னுமொரு நூலினை வெளியிட்டுள்ளார். எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய ஆலோசனைகள் சிலவற்றை அந்த நூல் வாயிலாக நமக்குத் தந்துதவினார்.

இப்போதைய நூல் 'வித்தும் விழுதும்' என்பது இந்தப் புத்தகத்துக்கு, ஒரு துணைத் தலைப்பையும் அவர் தந்திருக்கிறார். 'தமிழினம் அன்று முதல் இன்று வரை' - இதுதான் அந்தத் துணைத் தலைப்பு. இந்த நூல் பதினொரு இயல்களைக் கொண்டது. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துப் புவிச்சரிதச் செய்திகளைத் தொகுத்துக் கூறி, மனித இனத்தின் தோற்றம், இந்த இனம் கடந்துவந்த வளர்ச்சிப் படிநிலைகள், நாகரீகம், பண்பாடு, கலை முதலானவற்றின் எழுச்சி இவை எல்லாவற்றையும் (சான்றுகள் காட்டி) முதல் ஆறு இயல்களிலும் விளக்கியுள்ளார். தொடர்ந்து வரும் இயல்களிலே, தமிழர்கள்

**திறனாய்வுக்களம்**

சந்திக்க நேர்ந்த பிரதான மொழிகளில் ஒன்றாகிய வடமொழியின் வருகையையும் அதனால் உண்டாகிய தாக்க - மறுதாக்கங்களையும் எடுத்துக் கூறுகிறார்.

இறுதி இரண்டு இயல்களிலும் தமிழ் இனத்தின் இன்றைய தளர்ச்சிகளையும் அந்தத் தளர்ச்சிகளினின்றும் விடுபட்டுப் புத்துயிர் பெறுவதற்கான வழிமுறைகளையும் எடுத்து நோக்கி உள்ளார்.

### ஆசிரியர் தலையீடு

நூல் முழுவதையும் ஒருங்கே நோக்கும்போது, ஆரியர்களின் தலையீட்டினாலே தமிழினம் பெரிதும் பாதிக்கப்பட்டது என்ற கருத்து முதன்மை பெறுவதனை நாம் உணர்ந்து கொள்ளுகிறோம். ஆரியர்கள் தமது தரும சாத்திரங்களிலும்,தாம் வரைந்த நீதிநூல்களிலும் போட்டி பொறாமைகளையும் சமூக ஏற்றத் தாழ்வுகளையும் தூண்டி வலியுறுத்தும் போக்கினைக் கடைப்பிடித்தனர் என்று சுட்டிக் காட்டி உள்ளார்.

வடமொழி 'தேவபாடை' என்று காட்டிய பார்ப்பனர்கள், தமக்கு வசதியாக, கட்டுக்கதைக்களையும் உள் நோக்கங் கொண்ட விதிவிலக்குகளையும் ஆக்கிப் பரப்பினர் என்பது, இந் நூலாசிரியரின் உள்ளக் கிடக்கை ஆகும். அதற்கச் சான்றாக, அவர் வடமொழி நூல்களிலும் தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் இருந்து மேற்கோள்களை எடுத்துக் காட்டியுள்ளார்.

மேற்கூறியவற்றை ஒத்த கருத்துகளை, மறைமலை அடிகளார், கா.சுப்பிரமணியபிள்ளை,

**கவிஞர் இ. முருகையன்**

புலவர் குழந்தை, ஈ.வெ. இராமசாமி நாயக்கர், பாரதிதாசன், மு. வரதராசனார், தேவநேயப் பாவாணர், பெருஞ்சித்திரனார், முதலான தமிழகத்துக் கல்விமான்களும் எடுத்துக் கூறியுள்ளனர். இலங்கையிலும், ந.சி. கந்தையாபிள்ளை, கந்த முருகேசனார் போன்ற அறிஞர்களும் அவர்களிடம் கல்வி பயின்றோரும் அவர்களின் ஆக்கங்களைப் படித்தோரும், திராவிட இயக்கங்களின் செல்வாக்கு மேலோங்கியிருந்த ஒரு காலத்தில் தனித் தமிழக் கோட்பாட்டில் ஈடுபாடு

(2ஆம் பக்கம் பார்க்க)

# இன்று ஒரு தகவல்

## பாதுகையைப் பழிக்கலாமா!

சார்! புராண விஷயங்களைப்பற்றி நாம் பேசிக்கொண்டிருக்கிறபோது விஞ்ஞானக் கண்ணாடியை மாட்டிக்கொண்டு அதைக்கேட்க முயற்சிபண்ணுவது தவறு: அதனால் அப்படியாராவது போட்டுக்கொண்டிருந்தால் அதைக் கழற்றிவைத்துவிட்டு ஆன்மீகக் கண்ணாடியை எடுத்து மாட்டிக்கொண்டு அதன்பின்னர், இதைக் கேளுங்கள். அப்போதுதான் குறுக்குக்கேள்விகள் கேட்காமல் நீங்கள் இதைக்கேட்க முடியும். நானும்கொஞ்சம் துணிச்சலாக உங்களிடம் பேசமுடியும்.

வைகுண்டத்தில் ஒருநாள் திருமால் வழக்கத்துக்கு மாறாக ஒருகாரியம் பண்ணினார். தன்னுடைய பாதுகையை பள்ளியறைக்குள்ளே விட்டுவிட்டு பாம்பணையில் படுத்துவிட்டார். உடனே அவருடைய திருமுடிக்குக் கோபம் வந்துவிட்டது, முடி, பாதுகை இவைகள் தவம் பண்ணி அந்தப்பதவியை அடைந்திருக்கின்றனவாம். திருமுடி பாதுகையைப் பார்த்துச் சத்தம்போட ஆரம்பித்துவிட்டது. ஏ பாதுகையே! உனக்கு அறிவு இருக்கிறதா? கண்டகண்ட இடங்களையெல்லாம் மிதிக்கிறநீ இப்படிப் படுக்கை அறைக்குள்ளே வரலாமா? போவெளியேஎன்று கத்தியது பாதுகைஇதற்குப் பணிவாகப் பதில்சொல்லியது.

திருமுடியே! நீசொல்வது சரிதான்! இருந்தாலும் நானாக இந்த இடத்திற்கு வந்துவிடவில்லை! பகவானுடைய திருவடிதான் என்னை இங்கே கொண்டுவந்து உள்ளே விட்டுவிட்டது. அப்படிஇருக்கும்பொழுது வீணாக என்ன ஏன்கோபித்துக்கொள்கிறாய்? எய்தவன் இருக்கிறபோது அம்பை நோகலாமா? இது சரியா என்று கேட்டது. இதைக் கேட்டதும் திருமுடிக்கு இன்னமும் கோபம்கூடி விட்டது. பாதுகையே நீ மிகவும் அதிகமாகப் பேசுகிறாய். நீமிகவும் இழிவான ஒருபொருள் நீ இவ்வளவுதூரம் பேசக்கூடாது. இங்கே உள்ளேயிருப்பதற்கு உனக்குத் தகுதியே கிடையாது. நான் எப்படியென்றால் பெருமானுடைய தலைக்குமேலே இருக்கக்கூடியதகுதி உடையவன். என்னுடன் சரிக்குச்சரியாகப் பேசுவதற்குக்கூட உனக்குத் தகுதிகிடையாது. அதனால் இங்கே இருக்காதே சீக்கிரம் போய்தொலை என்றது.

''முடியே! எதற்காக இப்படி வீணாகப் பெருமையடித்துக் கொள்கிறாய்? எனக்கென்று தனியாக ஒரு செயலும் கிடையாது. நான் எப்போதும் ஐயன் திருவடியை ஒட்டிக் கொண்டிருக்கிறவன். அந்தப் பாதத்தை நம்பினவர்களுக்கு நல்லது நடக்கிறது. அடியார்கள் எப்பொழுதும் அடியைத்தான் விரும்புகிறார்கள். ''அடிசேராய்'' என்று தானே பாடுகிறார்கள். அதனால் என்னை இப்படிப் பழித்துப்பேசாதே'' என்றது பாதுகை. இவ்வளவு நேரமும் இந்த விவகாரத்தைப்பார்த்துக் கொண்டிருந்த சங்கும், சக்கரமும் திருமுடிபக்கம் சேர்ந்து கொண்டுபாதுகையை விரட்ட ஆரம்பித்து விட்டன. எப்போதுமே உயரத்தில் இருக்கிறவர்களுக்குத் தான் ஆதரவு அதிகமாக இருக்கும். உனக்கென்னஇவ்வளவு திமிர் பேசாமல் வாயை மூடிக்கொண்டு வெளியே போகின்றாயா இல்லையா?'' என்று அவை இரண்டும் கத்துகின்றன.

பாதுகை நிலைமை பரிதாபமாக இருந்தது. உடனே நாராயணனை நோக்கிக் ''கருணைக் கடலே நீங்களேஇப்படி என்னை உள்ளே கொண்டுவந்து விட்டு விட்டு, பின்னர் இவர்களை விட்டு இப்படிப் பேசச் சொல்வது சரியா?'' என்று முறையிட்டது. திருமால் உடனே ''பாதுகையே நீ கவலைப் படாதே'' என்று சொல்லிவிட்டு, முடியைப்பார்த்துச் சொல்ல ஆரம்பித்தார். ''முடியே! நீ தற்பெருமையாகப் பேசி இந்தப் பாதுகையை அவமானப் படுத்திவிட்டாய். அதனால் அடுத்து வருகிறஇராமாரவதாரத்தில் பதினான்கு வருடம் இந்தப் பாதுகையின்மேல் நீ இருக்கக் கடவாய். சங்கே, சக்கரமே நீங்கள் இருவரும் என் கண்முன்னாலேயே பாதுகையைப் பழித்துப் பேசிவிட்டீர்கள். அதனால் இராமாவதாரத்தில் நீங்கள் இருவரும் பரதனாகவும் சத்துருக்கனாகவும் பிறந்து இந்தப் பாதுகையைப் பதினாலு வருடங்கள் வழிபடக் கடவீர்கள்'' என்று சொல்லிவிட்டார். அதனாலேதான் பதினாலு வருடம் பாதுகைக்கு முடி சூட்டி பரதர் விரதம் இருந்து பாதுகையைப் பூஜித்து வந்தார்.

''கீழோராயினும் தாழவுரை'' என்பது இதன்விளக்கம். சின்னவர்கள் தானே என்று நினைத்து யாரையும் இகழக்கூடாது என்பதுதான் நாம் இதிலிருந்து தெரிந்து கொள்ளவேண்டியது. பாதுகையைப் பற்றி நான் உங்களுக்குத் தகவல் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அப்படிச்சொல்லி முடிப்பதற்குள் இதோஎன் எதிரில் ஒருவர் மிகவும் பக்குவமாக வந்து உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறார். நல்ல விஷயங்களைக் கேட்பதற்கு நல்லவர்கள் எப்போதும் தயாராகவே இருப்பார்கள் என்று நான் நினைப்பதற்குள்ளேயே அவர் பேச ஆரம்பித்தார்.

அவர் என்னைப்பார்த்து நீங்கள்சொல்வது சரிதான். இருந்தாலும் நான் உங்களைத் தேடிவந்தது வேறு விஷயம். அதுவும் பாதுகை சம்பந்தப்பட்ட விஷயம்தான் நேற்று நீங்கள் எங்கள் வீட்டுக்குவந்து விட்டுத் திரும்புகிறபோது, உங்கள் பழைய செருப்பை அங்கேயே விட்டுவிட்டு என்னுடைய புதிய செருப்பைபோட்டுக் கொண்டு வந்துவிட்டீர்கள். உங்களுடைய பாதுகையை மிகவும் பக்திபூர்வமாக அங்கிருந்து சுமந்து கொண்டு வந்திருக்கிறேன். ஏனென்றால் காலில்மாட்ட முடியவில்லை. காதறுத்துபோய் விட்டது. சார் நான் பரதன் இல்லை ஒருபாமரன். தயவு பண்ணி என்னுடையதை என்னிடம் கொடுத்து விடுங்கள்சார்'' என்றார்.

நீங்கள் என்னசொல்கிறீர்கள். கொடுத்து விடலாமா? வேண்டாமா? இவ்வளவு தூரம்பகிரங்கமாகத்தெரிந்து போன பின்னர் அதைத்திருப்பிக்கொடுப்பதுதான் நல்லது என்னசொல்கிறீர்கள்.

தென்கச்சிகோ. சுவாமிநாதன்

# இவ்வருட அரை ஆண்டுப் பகுதியில் ஆயிரத்து 564 வீதி விபத்துக்கள்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த 6 மாத காலத்தில் ஆயிரத்து 564 வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

இவ்விபத்துக்களின் காரணமாக இக்காலப் பகுதியில் மூவர் இறந்தும் பலர் மோசமான நிலையில் பாதிக்கப்பட்டும் உள்ளனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுலுக்கு வந்ததன் பின்னர் தென்பகுதியில் இருந்து தினசரி பெரும் எண்ணிக்கையான வாகனங்கள் குடாநாட்டு வீதிகளில் ஓடித்திரிவதும் இவ் வீதி விபத்துக்கள் அதிகரித்தமைக்கான காரணங்களுள் ஒன்று எனக் கருதப்படுகிறது.

அத்தோடு, குடாநாட்டில் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டுநர்கள் வீதிப் போக்குவரத்து நடைமுறைகளைப் பேணாது தம்மிஷ்டம்போலத் திரிவதும் மற்றொரு காரணம் எனச் சொல்லப்படுகின்றது. (உ-77)

## நடமாடும் வைத்திய சேவை

(தென்மராட்சி)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளை, பளைப் பகுதியில் நடமாடும் வைத்திய சேவையை வாரத்தில் 3 நாட்கள் நடத்தி வருகின்றது. (உ-77)

## தெய்வீக இசையரங்கில் இன்று

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்ற நல்லூர் உற்சவ காலத்தை ஒட்டிய தெய்வீக இசையரங்கில் நான்காம் நாளான இன்று, பங்கயற்செல்வி முகுந்தனின் பாட்டுக்கச்சேரி பக்க வாத்தியங்கள் சகிதம் இடம் பெறவுள்ளது. (உ)

## எரிகாயங்களுடன் குடும்பப் பெண்

(மந்திகை)

எரிகாயங்களுடன் குடும்பப் பெண் ஒருவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சமைத்துக்கொண்டிருந்த போது வலி ஏற்பட்டு நெருப்பினுள் விழுந்தமையால் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தின் போது பருத்தித்துறை கற்கோவளத்தைச் சேர்ந்த என். மல்லிகா தேவி (வயது-35) என்பவரே காயமடைந்தவராவர். (த-23)

## சமாதானச் சுற்றுலா

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் இருந்து சுமார் 70 பேர் அடங்கிய மாணவர் குழுவினர் தென்பகுதிக்கு சமாதான சுற்றுலா ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

அண்மையில் குருநாகல் தொழில் நுட்பக் கல்லூரியில் இருந்து 35 பேர் அடங்கிய மாணவர் குழு ஒன்று யாழ். தொழில் நுட்பக் கல்லூரிக்கு சமாதான விஜயம் மேற்கொண்டிருந்தது. அவர்களின் அழைப்பை ஏற்றே யாழ். தொழில்நுட்ப கல்லூரி மாணவர்கள் இச் சமாதான சுற்றுலாவை மேற்கொண்டுள்ளனர். (த-19)

## இருபொலிஸ் குழுக்கள் சோதனை

(கொழும்பு)

கொழும்பு மாநகரசபை முஸ்லிம்காங்கிரஸ் உறுப்பினர் சுட்டுக் கொல்லப்பட்டமை தொடர்பாக இருபொலிஸ்குழுக்கள் விசாரணைகளை நடத்தி வருவதாக வாழைத்தோட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டபிள்யு.என். சந்திரதிலக தெரிவித்துள்ளார்.

கொலைச்சந்தேக நபர்கள் வந்ததாகச் சந்தேகிக்கப்படும் பச்சைநிற முச்சக்கரவண்டியைப் பொலிசார் தேடிவருவதாகவும்,

ஏற்கனவே சந்தேகத்தின் பேரில் தடுத்துவைக்கப்பட்ட முச்சக்கரவண்டி விடுவிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

## தென்பகுதி பயணிகள் நலன் கருதி கைதடியில் இலவச தங்குமிடம்

(தென்மராட்சி)

தென்பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் வரும் பயணிகளின் நன்மையும் வசதியும் கருதி சாவகச்சேரி லயன்ஸ் கழகம் கைதடி நுணாவிலில் ஒரு இலவச தங்குமிடத்தினை அமைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகின்றது.

நுணாவில் கண்ணகை அம்மன் ஆலயத்துக்கு முன்பாகவுள்ள மேற்படி கழகத்தின் பெரிய மண்டபத்திலேயே இத்தங்குமிடம் அமைக்கப்படவுள்ளது.

இதில் தென்பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்துக்குச் சுற்றுலாவரும் பயணிகள் தங்கி தமது கடமைகளை ஆறுதலாக முடித்துச் செல்லக் கூடியதாக இருக்கும் எனவும் கூறப்படுகின்றது. (உ-77)

## நல்லூர் உற்சவ கால 'தெய்வீக நிகழ்ச்சிகள்' இன்று ஆரம்பமாகின்றன

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ காலத்தில் வடபிரதேச இந்துப் பேரவை வருடாவருடம்நடத்தும்தெய்வீக நிகழ்ச்சிகள் இன்றுமுதல் ஆரம்பமாகவுள்ளன.

63 நாயன்மார் குருபூசை மடத்தில் வடபிரதேசஇந்துப் பேரவைத்தலைவர் சு. நித்தியானந்தன் தலைமையில்இடம் பெறவுள்ள இத் தெய்வீக நிகழ்ச்சியில் இன்று சைவப் புலவர் கந்த சத்தியதாசன் 'வாழ்க்கையில்திருமுறைகள்' என்றதலைப்பில்சொற்பொழிவாற்றவுள்ளார். (உ)

## மாணவர்கள் மத்தியில் ஆங்கில அறிவை வளர்க்க கல்வியமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

உயர்தரவகுப்பு மாணவர்களின் ஆங்கில அறிவை மேம்படுத்துவதற்காக அரசாங்கம் ஆங்கில பாடப்புத்தகங்களை குறைந்த விலையில் மாணவர்களுக்கு வழங்கவுள்ளது என்று கல்வியமைச்சர் டாக்டர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

250 ரூபா செலவில் அச்சிடும் புத்தகங்களை 50 ரூபாவுக்கு இவ்வருடம் முதல்வழங்கவுள்ளதாகவும் அவர்தெரிவித்துள்ளார்.

மேலும், பாடசாலை சீருடைகள் வழங்கும் காலங்களில் பாடசாலைச் செயற்பாடுகள் மோசமாக பாதிக்கப்படுவதைத் தடுக்கப் புதிய நடைமுறை அமுல்படுத்தப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (உ)

## தபால் திணைக்களப் பணியாளர்களிடையே ஆக்க இலக்கியப்போட்டிகள்

(மந்திகை)

தபால் திணைக்களத்தில் கடமையாற்றும் பணியாளர்களின் ஆற்றல்களை வெளிக்கொண்டு வரும் நோக்கில் அவர்களிடையே ஆக்க இலக்கியப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

அரச சேவையிலுள்ள இலக்கிய கர்த்தாக்களை இனம் காணும் நடவடிக்கையின் ஓரங்கமாகவே தபால் திணைக்களப் பணியாளர்களிடையே இப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இதேவேளை, ஆக்கங்களை எதிர்வரும் 21 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னதாக அனுப்பிவைக்குமாறு பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் எஸ். சிவராஜசிங்கம் கேட்டுள்ளார். (உ-23)

## பரீட்சைத் திணைக்கள ஆணையாளராக மிகிந்த விஜயசிறிநியமனம்

(கொழும்பு)

இலங்கைப்பரீட்சை திணைக்களத்தின் ஆணையாளராக டபிள்யு. ஏ. மிகிந்த விஜயசிறி நியமிக்கப்பட்டுள்ளார்.

பரீட்சை ஆணையாளராக கடமையாற்றி வந்த ஏ. எம். ஆர். பி. அமரக்கோன் ஓய்வு பெற்றதைதொடர்ந்தே இவர் அந்த இடத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

மிகிந்தவிஜயசிறி கடந்த 28 ஆண்டுகளாக உதவி பிரதி பரீட்சைகள் ஆணையாளராகவும், நிர்வாக மேலதிக பரீட்சைகள் ஆணையாளராகவும் கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-8)

# சாவ. ஆஸ்பத்திரியைப் புனரமைக்க
# கைவசம் போதிய நிதி இல்லையாம்
## பொதுஅமைப்புகளின்உதவிநாடப்படுகிறது

(தென்மராட்சி)
சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் யுத்தத்தின் போது சேதமடைந்த இரு விடுதிகளையும் பிரசவ விடுதியையும் புனரமைப்புச் செய்து இயங்கச் செய்வதற்கான ஏற்பாடுகளை பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் செல்வி உமாசிவபாத சுந்தரம் மேற்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் சாவகச்சேரியிலுள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் ஒன்றினைநேற்று முன் தினம் நடத்தியிருந்தார்.

வைத்தியசாலையைப் புனரமைப்புச் செய்வதற்குப் போதிய நிதிதற்போது இல்லாமல் இருப்பது பற்றியும், இதற்கு சாவகச்சேரியிலுள்ள பொது அமைப்புகள் உதவ முன்வரவேண்டும் எனவும் அவர்கோரிக்கை விடுத்துள்ளதாகதெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய, சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலைக்கு கட்டில்கள், மெத்தைகள், படுக்கை விரிப்புகளை அன்பளிப்பாக வழங்குவதற்கு முன்வந்துள்ளது என மன்றத்தின் செயலாளர். டாக்டர் எஸ். எஸ். அருளானந்தம் தெரிவித்தார்.
(உ-77)

# சங்கானை ஆஸ்பத்திரியில் நிரந்தர பல்வைத்தியர் இல்லை மக்கள் ஏமாற்றம்

(சுதுமலை)
சங்கானை அரசினர் வைத்தியசாலைக்கு நிரந்தரப் பல்வைத்தியர் நியமிக்கப்படாமையால் அங்கு பல் வைத்தியத்திற்காகச் செல்வோர் ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர்.

மேற்படி வைத்தியசாலையில் கடந்த காலங்களில் பணியாற்றிய பல்வைத்தியர் இடமாற்றம்பெற்றுச் சென்றுள்ளதால் தற்காலிக பல்வைத்தியர்ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனால் வாரத்தில் இரு நாட்கள் மத்திரமே இங்கு பற்சிகிச்சை நடைபெறுகின்றது.
(உ-252)

## முன்னணிப் பெறுபேறுகள்

(கொழும்புத்துறை)
இவ்வருடம் இடம்பெற்ற க.பொ.த.(உ/த)பரீட்சையில் சென்சாள்ஸ் மகாவித்தியால மாணவர்கள் பெற்ற முன்னணிப் பெறுபேறுகள் வருமாறு. லே விஜயராஜ்-3ஏ, ச. டயனா-2ஏ,பி, செ ஜின்சியா-2ஏ, சி, யோ. நியூட்டன் 3பி.
(உ-263)

## திருட்டுக் கும்பல் அகப்பட்டது

(தென்மராட்சி)
நாவற்குழி கிழக்கில் ஆட்களில்லாத வீடுகளில் இருந்து கதவுகள், யன்னல்கள் போன்றவற்றினை இரவோடிரவாக லாண்ட்மாஸ்டரில் அபகரித்துச் செல்ல முயன்ற திருட்டுக் கும்பல் ஒன்று அப்பகுதி விழிப்புக் குழுவினால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டது.
(உ-77)

# முகாமை விட்டு வெளியேறுமாறு
# 56 குடும்பங்களுக்கு நிர்ப்பந்தம்

(தென்மராட்சி)
வலிகாமம் பகுதியில் 1993 ஆம் ஆண்டுமுதல் தனியார் காணிஒன்றில் இயங்கிவரும் இடம் பெயர்ந்தோர் நலன் புரி நிலையமொன்றில் தங்கியிருக்கும் 56 குடும்பங்களையும் அங்கிருந்துவெளியேறும்படி, குறித்தகாணியின் ஆட்சிக்கு தற்போது உரிமை கோருபவர் எச்சரித்து வருவதாக தெரியவருகிறது.

இதன்காரணமாக அங்கு தங்கியிருக்கும் மயிலிட்டி, காங்கேசன் துறைப் பகுதிகளைச் சேர்ந்த 56 குடும்பங்களும் எங்குசெல்வது என்று அறியாதுள்ளன.

தாம்தற்போதுஎதிர்நோக்கி வரும் இருப்பிடப்பிரச்சினை பற்றி வலிகாமம்வடக்கு பிரதேசசெயலரிடம்முறைப்பாடு செய்துள்ளதாக சம்பந்தப்பட்ட குடும்பங்கள் தெரிவித்துள்ளன.

மயிலிட்டி, காங்கேசன் துறை பகுதியில் இருந்து 1990 ஆம் ஆண்டில் இடம் பெயர்ந்த குடும்பங்களே இங்கு தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.
(உ-77)

## இரு மாடிக் கட்டடம்

(மந்திகை)
அல்வாய் பாரதிதாசன் சனசமூகநிலையத்திற்கு நவீன வசதிகளுடன் 25 இலட்சம் ரூபா செலவில் இருமாடிக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

போரூட் நல்லொழுக்க நிறுவனம் மற்றும் வெளிநாட்டில் வாழும் அல்வாய் வாழ் மக்களுடைய நிதி உதவியுடன் இக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.
(உ-23)

## இராசி பலன்

(17-8-2002)
(ஆவணி 01, சனி)

(தசமி பி.இ 4.18வரை)
கேட்டை பி.இ3 17வரை
ராகுகாலம். 9.05–10 35
நல்ல நேரம்-3.05- 4 35

**மேடம்**
போசன சுகம், எதிர்ப்பு, காரியதடங்கல் ,வாகனபயம்.

**இடபம்**
நண்பர்கள் சந்திப்பு, கலந்துரையாடல், காரியஅனுகூலம், தனவரவு.

**மிதுனம்**
தேக ஆரோக்கியம், குடும்பத்தில் மகிழ்ச்சி, எடுத்த காரியம் கைகூடும், சகோதரர் உதவி.

**கடகம்**
வாக்கு கலகம், போசன சுகம், முயற்சிதாமதம், சிறு வியாதி.

**சிங்கம்**
உடல்சோர்வு, தன்னம்பிக்கைக் குறைவு, அந்நியர் நேசம்,காரியதாமதம்.

**கன்னி**
காரியநன்மை, தனவரவு வாக்குமேன்மை, தொழில் சிறப்பு.

**துலாம்**
அரசநன்மை, வாக்குவாதம், முயற்சி கைகூடும்,திடீர் நன்மை.

**விருச்சிகம்**
நல்லமுயற்சி, சற்பனை மிதி, உறவினர் வருகை, சயனசுகம்.

**தனுசு**
கோபப்படுதல், பிதாவழி உறவு,காரிய அலைச்சல், சுபசெலவு.

**மகரம்**
தொழில் சிந்தை, பெரியோர் சந்திப்பு,காரிய சித்தி, தனலாபம்.

**கும்பம்**
சுபநிகழ்வு, தூரதேசச் செய்தி, செய்தொழில் மேன்மை,பிறர்உதவி.

**மீனம்**
புதியதிட்டமிடல், உடல் உழைப்பு, முயற்சி தாமதம், பிரயாணம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## இளைஞர் மன்றம் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)
குருநகர் புனித ஆரோக்கிய நாதர் ஆலய இளைஞர் மன்றம்,அருட்தந்தை பத்திநாதர் எடுத்த முயற்சியினால் புனரமைக்கப்பட்டு அண்மையில் மன்றத்தின் புதிய நிர்வாக சபைத்தெரிவு இடம்பெற்றபோது,தலைவராக பீற்றர் போல் தெரிவு செய்யப்பட்டார்.
(உ-262)

## நூலக அபிவிருத்தி தொடர்பாக ஆராய குழு

(யாழ்ப்பாணம்)
நல்லூர்ப் பிரதேசசபைக்குட்பட்ட நூலகங்களின் அபிவிருத்தி சம்பந்தமாக ஆராய தற்பொழுது9 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந் நூலகங்களின் அபிவிருத்தி வேலைகளை மேற்படி குழுவே முன்னெடுத்துச் செல்லுமெனவும் நல்லூர் பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்தன.
(உ-19)

## ஹொக்கிச் சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் 150 வது ஆண்டு விழாச்சபை அமரர் ஜெகதீஸ்வரி சிவலோகநாதன் நினைவாக நடத்தும் 9 பேர் கொண்ட, யாழ் மாவட்ட ரீதியிலான ஹொக்கிச் சுற்றுப் போட்டி, மேற்படி கல்லூரி மைதானத்தில் இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளது.

யாழ்.குடாநாட்டில் உள்ள 11 ஹொக்கி அணிகள் இச் சுற்றுப்போட்டியில் பங்கேற்கவுள்ளன.
(உ)

## மெய்வல்லுநர் போட்டி

(மானிப்பாய்)
வடலியடைப்பு கலைவாணி முன்பள்ளியின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பி.ப. 2-00 மணிக்கு சனசமூகநிலையத் தலைவர் க. தருமராசா தலைமையில் கலைவாணி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சர்வோதய முதுநிலை நிறைவேற்று உதவியாளர் எஸ். வி. சங்கரப்பிள்ளையும் சிறப்பு விருந்தினர்களாக வலி. தென்மேற்கு பிரதேச சபைத்தலைவர் வெ.அ. ஜோன்சன்,சனசமூக நிலை அபிவிருத்தி உத்தியோகத்தர் வே. கந்தசாமி ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.
(உ-252)

## கொள்ளைக் கும்பல் உறுப்பினர் சிக்கினார்

(புத்தளம்)
புத்தளம்பாலாவியில்உள்ள இறால் பண்ணையில் பல இலட்சம் ரூபாபெறுமதியான இறால்களைக் கொள்ளையடித்த கும்பலின் உறுப்பினர் ஒருவரை கற்பிட்டிப் பொலிசார் கைது செய்து புத்தளம் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இறால் பண்ணைக்குள் புகுந்த ஆயுதம் தரித்த 15 பேர் கொண்ட கொள்ளைக் கோஷ்டியினர், அங்கிருந்த ஊழியர்களை கடுமையாக தாக்கியதுடன், பணம், மற்றும் கையடக்கத் தொலைபேசி,மின்பிறப்பாக்கி என்பவற்றை கொள்ளையிட்டு சென்றுள்ளது குறித்து புத்தளம் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இக்கொள்ளைக் குழுவைச் சேர்ந்த உறுப்பினர்கள், அபகரித்துச் சென்ற இறால்களை நாட்டின் பல பாகங்களிலுள்ள உணவு விடுதிகள் மீன் சந்தைகளுக்கு விநியோகித்திருப்பதாத ஆரம்பவிசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளதாகவும்,

கைது செய்யப்பட்ட நபர் வண்ணாத்திவில்லு பகுதியைச் சேர்ந்த ரன்ஜித் விமலசிறி என்றும், இவரிடம் 15 பெட்டிகளில் சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த கொள்ளையடித்த இறால்கள் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புத்களத்தில் நீண்ட காலமாக இடம்பெற்று வரும் பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுக்கும்இக் கொள்ளையர்களுக்கும்தொடர்புஇருப்பது குறித்தும், விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.
(உ)

## மரங்களால் ஆபத்து

(கொழும்புத்துறை)
கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் மின்சார 'கேபிள்' தீப்பிடித்து எரிந்து வீதியின் குறுக்கே விழுந்துள்ளது.

ஆனாலும் ஆபத்து தவிர்க்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தீப்பிடிப்பதற்கு வெட்டப்படாது நிற்கும் மரங்களே காரணம் என்று மின்சார சபையினர் தெரிவித்தனர்.
(உ-262)

## சமகால அரசியல் கலந்துரையாடல்

(மந்திகை)
சமகால அரசியல் நிலை தொடர்பான கலந்துரையாடல் ஒன்றுநாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நெல்லியடி கலட்டி சனசமூக நிலையத்தில்,நிலையத் தலைவர் இ. மதியுகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் அரசியல் துறையின் வடமராட்சிப் பிரிவைச் சேர்ந்த தீபன், வைத்தி ஆகியோர் கருத்துரையாற்றவுள்ளனர்.
(உ-23)

## உதவித்திட்டங்கள் ஏதுமில்லை!
# வன்னியால் வந்த குடும்பங்கள்
# என்னசெய்வதென்றுஅறியாது தவிப்பு

(தென்மராட்சி)
குடாநாட்டில் நிலவிய அசாதாரண நிலைமையினால் வன்னிக்குப் பல வருடங்களுக்கு முன் இடம்பெயர்ந்து தற்போது மீளவும் இங்கு வந்துள்ள பெரும் எண்ணிக்கையான குடும்பங்கள் நிரந்தரமாக வசிப்பதற்குப் போதிய பாதுகாப்பான, வசதியான இருப்பிடங்கள் இல்லாமையினால் பல நடைமுறைக் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றன.

இத்தகையவர்கள் முன்பு வசித்த வீடுகள் சேதமடைந்து இருப்பதுடன், அவற்றினைப் புனரமைப்புச் செய்வதற்கு நிதியுதவி, பொருளுதவி அற்ற நிலையில் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

வன்னியில் இருந்து குடாநாட்டுக்கு வருகை தந்துள்ள குடும்பங்களின் புனர்வாழ்வுக்கு அரசு தரப்பிலோ அல்லது பொது நிறுவனங்கள் தரப்பிலோ போதிய உதவித் திட்டங்கள் முன்வைக்கப்படவில்லை.

இந்நிலையில் வன்னியில் இருந்து வருகை தந்துள்ள குடும்பங்கள் குடாநாட்டில் தமது வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கு பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றன.

அதேவேளை வன்னியில் இருந்து இங்கு வந்துள்ளவர்களில், மேசன் தொழில், தச்சுத்தொழில், சீவல் தொழில், விவசாயம், யந்திரங்கள் திருத்தும் தொழில், மீன்பிடித் தொழில் போன்றவற்றில் ஈடுபட்டவர்களுக்கு அவர்களது தொழில்சார் உபகரணங்கள் கூட இல்லாமல் இருப்பதால், அவர்கள் தமது தொழில்களைக் கூடச் செய்து வருமானம் பெறமுடியாத நிலையில் இருக்கின்றனர்.

இது இவ்விதமிருக்க, பிரதான உழைப்பாளர்களை இழந்துள்ள குடும்பங்களின் வாழ்க்கை நிலையோ தொடர்ந்தும் பரிதாபகரமாகவே இருக்கின்றது.

குறிப்பாக, தையல் வேலையை பிரதான ஜீவனோபாயத் தொழிலாகக் கொண்டுள்ள குடும்பங்களிடம், வருமானத்தைத் தேடக்கூடிய தையல் இயந்திரம் போன்றவை இல்லாமல் இருக்கின்றது குறிப்பிடத்தக்கது.
(உ-77)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம், யாழ்ப்பாணம்

## வட மாகாண பாடசாலை மாணவர்களுக்கிடையிலான 5ஆவது கண்காட்சிப் போட்டி

காலம் : 11, 12, & 13-09-2002
(புதன், வியாழன், வெள்ளி)

இடம் : யா/வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

இக்கண்காட்சிப் போட்டி பற்றிய சுற்றறிக்கை வட மாகாணத்திலுள்ள சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. பரீட்சைகள், பாடசாலை விடுமுறை போன்ற காரணங்களால் இத்தகவல் மாணவர்களுக்கு கிடைக்காமல் போயிருக்கலாம்.

எனவே பங்குபற்ற விரும்பும் க.பொ.த (உ.த / சா.த) மாணவர்கள் தனியாகவோ அல்லது குழுவாகவோ கீழ்க் காணும் தகவல்களைப் பர்த்திசெய்து பாடசாலை அதிபர் ஊடாக அத்தாட்சிப்படுத்தி அனுப்பி வைக்கவும்.

இப்போட்டியில் சகல துறைகளிலும் கண்காட்சிப் பொருள்களை அமைக்கலாம்.

பாடசாலையின் பெயர் : ..............................

கண்காட்சிப் பொருள் விபரம் : ..............................

..............................

பங்குபற்றும் மாணவர்களின் பெயர் : ..............................

..............................

அதிபரின் கையொப்பம் : ..............................

முடிவுத்திகதி : 31.08.2002

அனுப்பவேண்டிய முகவரி :
கலாநிதி. நாகலிங்கம் சிவயோகன்
கண்காட்சிப் பொறுப்பாளர் - JSA
பௌதிகவியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
யாழ்ப்பாணம்.


## அரசு பொறுப்பேற்கும்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரியை அரசு விரைவில் பொறுப்பேற்று நடத்தவுள்ளதாக உயர் கல்வி அமைச்சர் கபீர் காசிம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரி, பல்வேறு வசதியீனங்களுடன், கிளிநொச்சி அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றியத்தினால் நடத்தப்பட்டு வருகிறது.

அண்மையில் யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்கு விஜயம் செய்த குருநாகல் தொழில்நுட்பக் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் இக்குறைபாடு தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து அவர்கள் எடுத்த முயற்சியின் பேரில் அரசு மேற்படி தொழில்நுட்பக் கல்லூரியை பொறுப்பேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-19)

## சுயாதீன ஆ.குழு உறுப்பினர்கள் விரைவில் தெரிவு

(கொழும்பு)

உத்தேசிக்கப்பட்டிருக்கும் 4 சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர்கள் நியமனம் விரைவில் இடம்பெறும் எனவும் இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் விரைவில் நடைபெறும் எனவும் அரசியலமைப்பு சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பொலிஸ், தேர்தல், அரச சேவைகள், நீதிமன்றம் ஆகிய நான்கு முக்கிய சுயாதீன ஆணைக்குழுக்களுக்கே உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். (உ-3)


## நல்லூர் பிரதேச சபை- விடுதி

நல்லூர் பிரதேச சபையால் திருநெல்வேலிச் சந்திக்கு அருகாமையில் ஆடியபாதம் வீதியிலுள்ள யாழ். மருத்துவபீடத்திற்கு முன்பாகச்செல்லும் கோணாவளை வீதியில் சுற்றுலாப் பயணிகளின் நலன்கருதி சகல வசதிகளுடனும் கூடிய விடுதி திறக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களை விடுதியிலுள்ள பொறுப்பாளரிடமும் நல்லூர் பிரதேச சபை தலைமையலுவலகத்திலும் கொக்குவில் உப-அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

க. மணிபல்லவராஜன்
(ஜே.பி.யு.எம்)
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை,

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி,
15.08.2002

தொலைபேசி இல. 021-2530

## கொக்குவில் இந்து மயானம் - அபிவிருத்திச்சபை

கொக்குவில் இந்து மயானத்திற்கு முன்னைய அபிவிருத்திச் சபையை புனரமைப்பதற்கான விசேட பொதுக்கூட்டம் ஒன்று 25.08.2002ஆம் திகதி ஞாயிறு பி.ப.3.00 மணியளவில் கொக்குவில் நூலகக்கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. எனவே அம் மயானத்தைப் பாவிக்கும் பொதுமக்களையும், பொதுப்பணி மன்றங்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி,
15.08.2002

க. மணிபல்லவராஜன்
(ஜே.பி.யு.எம்)
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை,

[C/4858]


## எழுத்தாளர்களுடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழத் தேசிய வானொலியான புலிகளின் குரல் வானொலியில் இதுவரை ஆக்கங்களை எழுதியோருக்கும், எழுதிக் கொண்டிருப்போருக்கும் மற்றும் எழுத விரும்புவோருக்குமான சந்திப்பு ஒன்று எதிர்வரும் 18ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10.00 மணிக்கு கிளிநொச்சி, யாழ். சாலையில் அமைந்துள்ள புலிகளின் குரல் நிறுவன நடுவப் பணிமனையில் நடைபெறவுள்ளது.


இந்நிகழ்வில் தமிழீழத் தேசிய வானொலியான புலிகளின் குரல் வானொலியில் ஆக்கங்களை எழுதியோரையும், எழுதிக் கொண்டிருப்போரையும் மற்றும் எழுத விரும்புவோரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளது. (உ)

## கஞ்சா புகைத்த கண்டி மாணவர்கள் கைது


(யாழ்ப்பாணம்)

பாடசாலைக்குச் செல்லாது களவாகக் கஞ்சா புகைத்துக் கொண்டிருந்த கண்டி நகர உயர் பாடசாலை மாணவர்கள் மூவரைக் கண்டிப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (உ)

மடு அன்னையின் யாத்திரைத்தல திருவிழா திருப்பவனி நேற்றுமுன் தினம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இங்கு மடு அன்னையின் திருச்சொரூபப்பவனியையும், பவனியில் கலந்து கொண்ட அருட்தந்தையர்கள் மற்றும் யாத்திரிகர்களையும் படங்களில் காணலாம்.
படங்கள் : உடுவில் ம. மயூரன்



## நல்லூரான் திருவடிக்கு - 05



### விஞ்சுதே என்ன விடை!

ஆர்க்கும் அடியார் அணியணியாய் வந்துன்முன்
வேர்க்க விதிர்க்கவரம் வேண்டிநின்றார்
- பார்க்கிலையே
பஞ்சமும் பட்டினியும் பாழ்பட்டோர் வஞ்சனையும்
விஞ்சுதே என்ன விடை

- நயினைச் சோதி -

### செழுங் கருணை தாராயோ?

கந்தா வுனைக் காணக்
காலகடுக்க ஓடி வந்தேன்
நந்தா விளக் குன்னை
நாடித் துதிக்க வந்தேன்
செந்தா மரை யுடனே
சேவிக்க வந் துள்ளேன்
சிந்தா மணிச் சுடரே!
செழுங் கருணை தாராயோ?

- தென்நல்லை கு. பகீரதன் -

### அமைதியைத் தந்திடப்பா!

முத்துக் குமரையனே எங்கள்
மூத்த தமிழ் மகனே
புத்தம் புது வாழ்வு – இந்தப்
பூமிக்குத் தருவாயப்பா

நல்லைக் குமரேசா நலம்
நல்கும் கதிரேசா
வல்லமை தந்திடு வாய் – இங்கு
வாடும் மனிதருக்கே

குறிஞ்சி நிலத் தலைவர் அன்புக்
குறமகளின் துணைவா
அறிஞர் சபை முதல்வா இங்கு
அமைதியைத் தந்திடப்பா

- நிவேதிதா -

### எம் அவலம் மறையுது!

கருணை வடிவமைந்த கந்தா
கலையின் உருவெடுத்த வேலா
உருகும் மனது கண்டு உடனே
உதிக்கும் நிலவெனவே அருள்வாய்
அருகில் நீயிருக்கும் துணிவால்
அவலம் மறையுதெங்கள் மண்ணில்
முருகன் உனதழகைக் காண
மூவினமும் திரண்டிட நீ வருவாய்!

- செ. பவானி -

### விழாவினில் என்றுமே!

நல்லைநகர்ப் பதியாளும் முருகா
நல்லவரம் தரவேண்டும் ஐயா
தொல்லையெலாம் தீரவேண்டும் முருகா
தொழுகின்றோம் விழாவினில் என்றுமே

- பிரகான் -

### நைமித்திய பூசைகளில் நாம் பணிய வருகிறோம்!

பிரணவப் பொருளுரைத்தாய்
விடையமர் சிவன்மைந்தா
தரை. வழி திறந்தாய்
தமிழரை மீட்பாய்
படைகளின் தலைவா
பரந்தாமன் மருகா
தார்மீக வாதிகள்,
தடம்புரளாமல்,
உரிமைகள் தரவருளும்
நாதங்களின்றலைவா
நல்லூர் வேல்முருகா
நைமித்திக பூசைகளில்
நாம் பணிய வருகிறோம்!

- மாருதி, ஆவரங்கால் -

### அருள்வான் நல்லைக் கந்தன்!

தொல்லை யகன்றிடும் நல்லூரின் மண்ணிலே
பல்வினை தீர்ந்திடும் கந்தனின் வாசலிலே
கல்லையும் கனியச்செய்யும் கந்தனின் கண்களே
எல்லையின்றி அருள்வான் நல்லைக் கந்தனே.

- கு. சிவகுமார், சுன்னாகம்

### யாழ்.குடாநாட்டில்

# மனித உரிமைகளுக்கான கல்வி முதலாவது செயலமர்வு நேற்று

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில், மனித உரிமைகளுக்கான கல்வித் திட்ட முதலா துசெயலமர்வு நேற்று ஆரம்பமானது. கோப்பாய்பொலிஸ்நிலைய உயர் அதிகாரிகளுக்கும் காங்கேசன்துறைகடற்படை அதிகாரிகளுக்கும் அவ்வவ் இடங்களில் வைத்து மனித உரிமைகளுக்கானகல்விச்செயலமர்வு நடத்தப்பட்டது.

யாழ் மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் புதிய இணைப்பதிகாரியும், விசாரணை அதிகாரியுமான றுவான் சந்திரசேகர மற்றும் சட்டத்தரணிறெமிடியஸ் ஆகியோர் இதற்கான விரிவுரைகளை நடத்தினர்.

யாழ் சிறைச்சாலை அதிகாரிகள் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், கல்வித்திணைக்கள அதிகாரிகள், செயலகஉத்தியோகத்தர்கள். பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர்மத்தியில் மிக விரைவில் இவ்வாறான மனித உரிமைகள் தொடர்பான கல்விபோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (உ.19,6)

## சீனாவில் மண்சரிவு 67 பேர் உயிரிழப்பு

(பீஜிங்)

சீனாவில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட மண் சரிவு காரணமாக சுமார் 67 பேர் உயிரிழந்துள்ளதுடன் மேலும்பலர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்,

சீனாவின் 10 கிராமங்களை உள்ளடக்கியதாக ஏற்பட்ட இந்த மண்சரிவினால் அப்பிரதேசங்களிலுள்ள 600வீடுகள் சேதமடைந்துள்ளன.

இவ்வாரத்தில் சீனாவில் ஏற்பட்ட இரண்டாவதுமண்சரிவு இது வென்பது குறிப்பிடத்தக்கது உயிரிழந்தவர்களின் சடலங்களை மீட்கும் பணியில் சுமார் 3 ஆயிரம் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக சீனப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார் (உ-8)

### தொலைத் தொடர்பு அமைச்சு

## அலுவலகக் கட்டிடத்திற்கு அருகில் குண்டு வெடிப்பு

(காபூல்)

ஆப்கான் தலைநகர் காபூலில் அமைந்துள்ள தொலைத் தொடர்பு அமைச்சு அலுவலகத்திற்கு அருகில் கைக்குண்டுவெடித்ததில் அமைச்சு அலுவலகம் பாதிப்புக்குள்ளானது.

ஊரடங்குச்சட்டம் அமுலில் இருந்த வேளையில் நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது

ஆப்கானின் தற்போதைய அரசைச் சீர்குலைக்கும்நோக்கில் அல்கெய்ட்டாக்கள் அல்லது தலிபான் அமைப்பு இத்தாக்குதலை மேற்கொண்டிருக்கலாம் என உளவுப்பிரிவினர் தெரிவித்துள்ளனர். (உ-8)

### பயிற்சி

(யாழ்ப்பாணம்)

களுத்துறையில் இடம்பெறவுள்ள சமாதானத்திற்கான விளையாட்டு விழாவில் கலந்து கொள்ளவுள்ள யாழ். மாவட்ட 22 வயதுக்குட்பட்ட உதைபந்தாட்ட அணிகளுக்கான பயிற்சி இன்று யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் பி.ப. 4.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. (உ-6)

### ★ விமான விபத்தில்

# பலியானவர்களின் சடலங்கள் ஒப்படைப்பு

(கொழும்பு)

களுத்துறை நாகொட பகுதியல் நேற்று முன்தினம் விமானம் விபத்துக்குள்ளான போது உயிரிழந்த இருவிமானப்படை அதிகாரிகள் உட்பட ஐவரினதும் சடலங்கள் நேற்று உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன

நகொட பகுதியிலிருந்து இவ் ஐவரினதும் சடலங்கள் விசேட விமானம் ஒன்றின் மூலம் கட்டுநாயக்காவுக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு இவ்வுடல்கள் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டதாக விமானப்படைப் பேச்சாளர் விங் கொமாண்டர் அஜித் விஜயசுந்தர தெரிவித்துள்ளார். (உ-8)

## மட்டக்களப்பில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட மீனவர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் நேற்றுக்காலை 9 00 மணியளவில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

கடல்வலயத் தடைச்சட்டம் நீக்கப்படல், வெளிநாட்டு மீன்பிடிக் கப்பல்கள் கிழக்குப் பிரதேச கடற்கரையோரங்களில் மீன்பிடிப்பதை அரசு தடைசெய்தல் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது.

இப்பேரணியின் முடிவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, கடற்றொழில் அமைச்சர்மஹிந்தவிஜயசேகர ஆகியோருக்கு அரசாங்க அதிபருடாக மகஜர்கள் அனுப்பி வைக்கப்பட்டன. (உ-8)

### மறவன்புலோ

## விவசாய சம்மேளனம் பிரதமருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

மறவன்புலோ, தனங்கிளப்பு கோயிலாக்கண்டி பகுதிகளில் இயல்புநிலையைத் தோற்றுவித்து விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளவழிவகை செய்யுமாறு கோரி மறவன்புலோ விவசாய சம்மேளனம் பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவுக்கு அவசர மகஜர் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின்பெர்னாண்டோ விவசாய நடவடிக்கைகளுக்கு வழிவகை செய்வதாக உறுதியளித்தபோதிலும் இதுவரை ஆக்கபூர்வ நடவடிக்கையெதுவும் எடுக்கப்படாமை.

பெரும்போகச் செய்கைக் காலம் நெருங்கி வருவதால் விவசாய நடவடிக்கைகளுக்கு உடனடியாக அனுமதி அளிப்பதன் அவசியம் ஆகியன குறித்து அம்மகஜரில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (உ)

### தாய்லாந்து பேச்சுக்கான

## திகதிநிர்ணயம் குறித்து ஜப்பான் வரவேற்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் தாய்லாந்தில் நடைபெறவுள்ள சமாதானபேச்சுவார்த்தைகளுக்கான திகதி நிர்ணயிக்கப்பட்டிருப்பதை ஜப்பான் வரவேற்றுள்ளது.

ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் ஜோறிக்கோ ஹவா குச்சி இது குறித்து விடுத்துள்ள அறிக்கையில்

அரசு புலிகளுக்கு இடையே செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையிலான நம்பகரமான செயற்பாட்டின் பிரதிபலிப்பாகவே இதுஉள்ளது.

எனினும் இப்பேச்சுவார்த்தைகளின் போது மக்களின் எதிர் பார்ப்புக்களுக்குரியவாறு நடந்து கொண்டு திடமான முடிவுகளை எடுக்க வேண்டும்.

நாட்டின் சமாதானமுயற்சிகளுக்கு ஆதரவுதெரிவிக்கும் வகையில் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு மனிதாபிமான உதவிகளை ஜப்பான் வழங்கியுள்ளது.

நிரந்தரமான சமாதானம் ஏற்பட்ட பின்னர் இப்பகுதிகளுக்கு மேலும் பலஉதவிகளை வழங்க தமது அரசுமுன்வரும் எனவும் மேலும்குறிப்பிடப்பட்டுள்ளது- (உ-8)

## கடல் போக்குவரத்தில் கஷ்டம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவுக்கும் குறிகட்டுவானுக்கும் இடையிலான பயணிகள் சேவையில் ஈடுபட்டு வந்த வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான குமுதினிப் படகு பழுதடைந்து நீண்ட நாட்களாகியும் திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்படவில்லை.

இதனால், நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொருட்கள் ஏற்றியிறக்கும் பணியில் ஈடுபடும் சமுத்திரதேவா படகில் மக்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் பயணம் செய்துவருகின்றனர்; (உ-249)

## விளையாட்டு போட்டி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட மானிப்பாய் மேற்கு திருவள்ளுவர்சனசமுகநிலைய முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழா நாளை பிற்பகல் 1.30மணியளவில் நிலையத்தின் தலைவர் இ. லோகேந்திரராசா தலைமையில் திருவள்ளுவர் சனசமூக நிலையத்திற்கு அருகாமையில் உள்ள மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் திருமதி எஸ். செல்வராசாவும் சிறப்பு விருந்தினராக வலிதென்மேற்கு சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் வி. கந்தசாமி, முறைசாராக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. சிவநேயன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்; (இ- 233)

# உலக தரிசனம்

## மனிதாபிமானமற்ற வகையில் பலஸ்தீனர்களை நடத்த வேண்டாம்

### மனித உரிமை அமைப்புகள் கோரிக்கை

(ஜெருசலேம்)

பலஸ்தீனர்களை மனிதாபிமான மற்ற வகையில் நடத்துவதை இஸ்ரேலியர்கள் கைவிடவேண்டுமென மனித உரிமை அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

நேற்றுமுன்தினம்பலஸ்தீன இளைஞன் ஒருவன் இஸ்ரேலிய இராணுவத்தினரால் மனிதக்கேடயமாக பயன்படுத்தப்பட்டு கொல்லப்பட்டதை அடுத்தே மனிதஉரிமை அமைப்புஇக் கோரிக்கையை விடுத்துள்ளன.

இஸ்ரேலிய இராணுவத்தினர் தங்களது பாதுகாப்புக் கருதி பலஸ்தீனர்களை தங்கள பாதுகாப்புக் கவசமாகப் பயன்படுத்துவதும் பாதுகாப்பற்றபிரதேசங்களில் அவர்களை முன்நகர்த்தி வருவதும் வழமையானதொன்றாகி விட்டது.

எனவே இவ்வழக்கத்தை உடனடியாககைவிட்டு ஐக்கிய நாடுகள சபையின்நெறிமுறைகளை கடைப்பிடிக்கு மாறு மனித உரிமை அமைப்புகள் இஸ்ரேலிய அரசை கோரியுள்ளன. (உ-8)

## சவுதி மன்னர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

(வாஷிங்டன்)

அமெரிக்கா மீதான செப்ரெம்பர் 22 பயங்கரவாதத் தாக்குதல்களின் போது பலியானவர்களின் உறவினர்கள், 3சவுதி மன்னர்கள மற்றும் வெளிநாட்டுவங்கிகள் சூடான் அரசு ஆகியவற்றுக்கு எதிராக அமெரிக்க மாவட்ட நீதிமன்று ஒன்றில் சிவில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

அமெரிக்க வர்த்தகமையத்தின் மீதான தாக்குதலுக்கு சூத்திரதாரியாக விள்ங்கும் ஒஸாமாபின்லேடனுக்கும்அவரது அல்கெய்டா அமைப்பினருக்கும் நிதிஉதவி வழங்கியுள்ளதாக குற்றஞ்சாட்டியே இவ்வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது;

பயங்கரவாதிகள் அனைவரும் குற்றமிழைத்தவர்கள். ஆனாலும் இவர்களுக்கு பல்வேறு வழிகளிலும் உதவி புரிபவர்கள் மாபெரும் குற்றவாளிகளாகவே கருதப்படுவார்கள் என அம் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது: (உ-8)

### இலங்கை நபருக்கு

## இந்தியாவில் கடூழியச்சிறை

(புதுடில்லி)

தமிழகத்திலிருந்து இலங்கைக்கு போதைப் பொருட்களை கடத்தி வந்த நபருக்கு அண்மையில் சென்னை நீதிமன்றம் ஒன்று 10 ஆண்டு கால கடூழியச் சிறைத் தண்டனையும், 1 இலட்சம் ரூபா அபராதமும் விதித்து தீர்ப்பளித்துள்ளது-

கடந்த 2000 ஆம் ஆண்டு ஜனவரிமாதம் சுமார் 8 இலட்சம் ரூபா பெறுமதியான போதைப் பொருள்களை கடத்தினார் என்ற குற்றச்சாட்டிற்காகவே இந்நபருக்கு மேற்படி தண்டனை விதிக்கப்பட்டுள்ளது; (உ-8)

### வரலாற்றுப் புகழ்மிக்க

## வெஸ்ரன் நகரம் நீரில் மூழ்கும் அபாயம்

(பேர்லின்)

ஜேர்மனியின் கிழக்குப் பகுதியில் தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக வரலாற்றுப்புழ்மிக்க 'வெஸ்ரன்' நகர் நீரில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஒருவாரகாலமாக அங்கு தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக ஒருஇலட்சத்துக்கும் அதிகமானமக்கள் தமது குடியிருப்புகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

மத்தியஐரோப்பிய நாடுகளில் இவ்வாரம் பெய்தகடும் மழையினால் செக்குடியரசு உட்பட பல நாடுகளும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளமை குறிப்பிடத்தககது. (உ-8)

உற்றநோய்நீக்கி உறாஅமை
முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக்
கொளல்
குறள்

# வலம்புரி

## தெரியாத சிறை

யாழ்ப்பாணத்தில் காணாமற் போனோரின் உறவினர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்துக் காணாமற்போன தமது உறவினர்களை மீட்டுத்தரும்படி கேட்டுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகளைத் தமிழ்க்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் செய்திருந்தனர்.

இதற்குப்பின்னர் பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக்காலத்திலும் காணாமற் போனோர் சங்கப் பிரதிநிதிகள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைச் சந்தித்து காணாமற்போன தமது உறவுகளை தேடித்தருமாறு கேட்டிருந்தனர். முடிவு எதுவும் இல்லை.

பிரதமருடனான சந்திப்பின் போது காணாமற்போனோர் சங்கப்பிரதிநிதிகள் தென்னிலங்கையிலுள்ள சிறைச்சாலைகளுக்குச் சென்று தமது உறவுகளைத்தேடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது இதன் பிரகாரம் நேற்றையதினம்சிறைச்சாலைகளுக்குச் சென்று காணாமற்போன தமது உறவுகளைத் தேடினர். எனினும் எவரையும் காணமுடியவில்லை.

1996ஆம் ஆண்டுமுதல் காணாமல்போன தமது உறவுகளைத் தேடி உருக்குலைந்து போனவர்களின் நிலைமை மிகவும் வேதனைக்குரியது. என்றோ ஒருநாள் காணாமல்போன தமது உறவுகள் வருவார்கள் என்ற நம்பிக்கையோடு காலம் கடக்கிறது.

ஆனால் அந்த நம்பிக்கை எந்தளவு தூரம் நிறைவேறுமென்பது கேள்விக்குரியது. ஏனெனில் கிரிசாந்தி கொலை வழக்கின் முதலாவது எதிரியானராஜபக்ஷதெரிவித்த தகவலின்படி செம்மணியில் 600க்கும் மேற்பட்டவர்களைப் படையினர் கொலை செய்து புதைத்துள்ளனர். இப்புதை குழியைததோண்டுவதற்கு முன்னதாக செம்மணியில் படையினரின் வாகனங்கள் இரவு நேரங்களில் ஓடித்திரிந்துள்ளது. இதனால் மனித புதைகுழியிலிருந்து மனித எச்சங்கள் எதனையும் எடுக்கமுடியாமற் போயிற்று. இவற்றை நோக்கும்போது காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்திருக்க முடியும்என்பதை ஊகிக்கமுடியும்.

# பண்டைத் தமிழர்கள் உழவுத் தொழிலுடன்
# பல்வகைத் தொழில்களிலும் சிறந்து விளங்கினர்

### ஆ. தேவராசன்

தமிழர் திருநாளாகிய பொங்கற் திருநாள் உலகிலேயே ஒரு பெருநாள்-உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்யும் பெருநாள். உலகனைத்தும் தொழிலின் புகழ் பாடும்மே நாள், வரலாற்றுப் பின்னணியில் உதித்தது. ஆனால் பொங்கற் திருநாள் தமிழ் மக்களின் வாழ்விலிருந்து பண்பாட்டிலிருந்து பாரம்பரியத்திலிருந்து பிறந்தது. அவர்கள் வாழ்வோடு ஒன்றி இயைந்தது, எனவே அது பெருமை மிக்க பெருநாள் உலகிலேயே ஒரு தனித் திருநாள் மேநாளில் தொழிலாளர் பெருமைபேசும் தனியுரிமை தமிழருக்குண்டு.

**உயர்வான உழவுத்தொழில்**

உழவுத்தொழிலைத் தலையாய பெருந்தொழிலாக மதித்து வாழ்ந்தவர்கள்எமது பண்டைத் தமிழர் திருவள்ளுவர் உழவுத்தொழிலை மிக உயர்ந்த தொழிலாகப் போற்றுகிறார். உழவுத்தொழிலைச் செய்யாது ஏனைய தொழில்களைச்செய்துவாழ்பவர்களையும் தாங்கி நிற்பதால் உழவர்கள் உலகத்து உயிரோம்பும் அச்சாணியன்ன உயர்ந்தோராவர் என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

'உழுவார் உலகத்தார்க்
காணியஃதாற்றாது
எழுவாரை யெல்லாம்
பொறுத்து'

என்பது திருவள்ளுவர் கூற்று இதே கருத்தைப் புறநானூறும் தருகின்றது. உழவின் மூலம் உணவைப் படைப்பவர்கள் உற்பத்தி செய்பவர்கள் உடம்பும் உயிரும் படைத்தவர்கள் ஆவார்கள் என்பது புற நானூற்றுக்கருத்து. 'நீர் இன்று அமையாயாக்கைக்கு எல்லாம்உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' உண்டி, முதற்றே உணவின் பிண்டம்.

'உணவெனப்படுவது நிலத்
தொடு நீரே
நீரும் நிலனும் புணரி
பெயர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்
தினோரே!'

என்பது அப்புறநானூற்றுப் பாடல் ஆகும். உழவுத் தொழிலை மேற்கொள்ளாது உணவு உற்பத்தியில் கவனம் செலுத்தாது காலத்தை வீணாக்கும் தீயோர் இறுதியில் தம்மைக்காக்க யாருமற்ற நிலையில் உழவர்வீட்டுப்படிக்கட்டுகளை ஏறிஇறங்கும்காட்சியையும் புறநானூறுவர்ணிக்கிறது.

'ஏரின் வாழ் நர் குடிமுறை
புகாஅ
ஊழ்இரந்துண்ணும்உயவல்
வாழ்க்கைப்
புரவு எதிர்ந்து கொள்ளும்
சான்றோர் யார்?

**விருந்தோம்பல்**

உழவர்களுடைய வாழ்விடங்கள், இல்லங்கள் நெடுநிரை மாடங்களாகக் காட்சி தந்தன. உழவர்பெண்கள் விருந்தோம்பலை விரும்பிக் கடைப்பிடித்தனர். தாம் பெற்ற பலவளங்களையும் ஏனையோரும் அனுபவிக்க வேண்டுமென்ற, பெரு விருப்புக் கொண்டிருந்தனர். இந்த உழவர்பெண்கள் இட்ட உணவை உண்டு பசி ஆறிக் களிபெருக்கிச் சென்றோர் பலர், உழவால் உயர்ந்த நிலையைக் காட்டுகிறது புறநானூறு.

உழவு முடிந்து அறுவடை செய்த பின்னர், உழவர் பாடலும், இசையும் கொட்டி முழக்கி ஆரவாரித்துக் களிகொள்ளும் காட்சியைச் சிலப்பதிகாரமும் காட்டுகிறது.

'ஏரோடு நின்றோர் ஏர் மங்கலமும், அரிந்து கால் குவித்தோர் அரிகடாவுறுத்த பெருஞ் செய்ந்நெல்லின் முகவைப்பாட்டும், தெண் கிணைப் பொருநர் செருக்குடன் எடுத்த மண்கதனை முழவின் மகிழிசை ஓதையும்' என்கின்றது சிலப்பதிகார அடிகள், இவையாவும் உழவைப் பற்றிய குறிப்புகள்.

**பல்வேறு தொழில்கள்**

உழவுத்தொழில் தலையாய தொழில் என்று கருதப்பட்டாலும், அன்று பல்வேறு தொழில் செய்து வந்தோர் எண்ணிக்கையும் அதிகம் பல்வேறு தொழிலும் பெருகியதால் மக்கள் வாழ்க்கைத்தரமும் உயர்ந்தது. பல்வேறு தொழில்களையும், தொழில் செய்யும் மக்களையும் போற்றும் பண்பும் பண்டைக் காலத்தில் நன்கு நிலவியது. தொழில்கள் பெருகின மக்கள் வாழ்வு உயர்ந்தது நாடு நன்மை பயந்தது.

'காழியர், கூனியர் கண்
கஞடையாட்டியர்
மீன் விலைப் பரதவர்வெள்
ளுப்புப் பகருநர்
பாசவர் வாசவர் பைந்
நிண வினைஞரோடு
ஓசுநர் செறிந்த ஊன் மலி
இருக்கையும்
கஞ்சகாரமும் செம்பு செய்கு
நரும்
கண்ணுள் வினைஞரும்
மண்ணீட்டாளரும்
பொன் செய் கொல்லரும்
நன்கலம் தருநரும்
துன்னகாரரும், தோலின்
துன்னரும்
கிழியினும் கிடையினும்
தொழில் பல பெருக்கிப்
பழுதில் செய்வினைப் பால்
கெழு மாக்களும்
குழலினும் யாழினும் குரல்
முதல் ஏழும்
வழுவின்றிசைத்து வழித்தி
றம் காட்டும்
அரும் பெறல் மரபிற்
பெரும்பாணிருக்கையும்
சிறு குறுங்கைவினைப் பிறர்
வினையாளரொடு என்று பல்வேறு தொழில் செய்பவர்களைப்பற்றிச் சிலப்பதிகாரமும்

'மகதவினைஞரும்
மராட்டக்கம்மரும்
அவந்திக் கொல்லரும்
யவனத் தச்சரும்
தண்டமிழ் வினைஞர்
தம்மொடு கூடி'

என மணிமேகலையும்,

'கோடு போழ்கடைநரும்
திருமணிகுயினரும்
சூகுறு நன்பொன் சுடர்
இழை புனைநரும்'

என்று மதுரைக்காஞ்சியும் குறிப்பிடுகின்றன.

**சீனித் தொழிலாலை**

தொழிலாளர் தனித்தனி வேலைசெய்ததோடு தொழிற்சாலைகளிலும் வேலை செய்தார்கள். சீனி ஆலை வைத்து தொழில் செய்த செய்தியைப் பெரும் பாணாற்றுப் படை கூறுகிறது.

'மழைவிளையாடும் கழை
வளர் அடுக்கத்து
அணங்குடையாளி
தாக்கலின் பல உடன்
கணம் கால் வேழம்
கதழ்வுற்றா அங்கு,
எந்திரம் சிலைகக்கும்
துஞ்சாக்கம்பலை
விசயம் அடுஉம் புகைசூழ்
ஆலை தொறும்
கரும்பின் தீம்சாறு

விருப்பினிர் மிசைமின்'

உழவும் தொழிலும் பண்டைத்தமிழர்வாழ்வுக்கு வளம் கூட்டி ஒயிலாக்கியது. 'ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்' என்று ஈழத்தின்உணவுச் செழிப்பைப் பட்டினப்பாலை குறிக்கின்றது. இன்று ஈழத்தில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. உழவுக்கும் தொழிலுக்கும் நிந்தனை செய்து அவற்றை வந்தனைசெய்யாத அளவில் ஈழம் முக்கியமாகத் தமிழர்கள் வாழ வழி பிறக்காது. உழவுக்கும் தொழிலுக்கும் மதிப்புக் கொடுக்கும் மே திருநாளோடு இதனை எடைபோட்டுப் பார்ப்பது பயன் தரும் செயலாகட்டும். ★

## தினசரி தியானம்

### ஒத்திப் போடாதீர்கள்

காலம் தாழ்த்துதல், நேரத்தைத் திருடுதல் ஆகும். நாளை என்பது மீண்டும் எப்போதும் வராது. எக்காரியம் ஆற்றுவதற்கும் நாளை என்பது மிகவும் தாமதமானது. உதவியும் வெற்றியும் நாளைகிட்டும் என்று எதிர்பார்க்கிறவர் இன்று வீழ்ச்சியடைகிறார். அறிவாளி இன்றே, நேரத்தில் எழுந்து பிரார்த்தனையைத் தொடங்கி, தியானம் செய்து, தன் இலட்சியங்களுக்கான செயல்களைச் செய்து, இன்றே ஆற்றல், அமைதி, வெற்றி ஆகியவைகளை அடைகிறார். இன்று காலையில் செய்யக்கூடியவற்றை மாலைக்குத் தள்ளிப் போடாதீர்கள். நாளை என்பது முட்டாள்களின் பஞ்சாங்கத்தில் உள்ளது.

சுவாமி சிவானந்தர்

# தாய்லாந்துப் பேச்சுக்கு அரசியல் கட்சிகள் ஆதரவு

### பொ. ஐ.மு. ஊடகத்துறை பேச்சாளர்

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் அடுத்த மாதம் தாய்லாந்தில் ஆரம்பமாகவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு பெரும்பாலான அரசியல் கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

பொதுஜன ஐக்கியமுன்னணியின் ஊடகத்துறைப்பேச்சாளர் டாக்டர் சரத்அமுனுகம விடுத்த அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அப்பேச்சுவார்த்தைகளின் போது வடக்கு-கிழக்கு பகுதிகளில் அமையவுள்ள இடைக்காலநிர்வாகம் குறித்து ஆராயப்படுவதுமட்டு மன்றிஅதன் அதிகாரம் எவ்வாறு பரவலாக்கப்படவேண்டும்என்பது குறித்தும் ஆராயப்படவேண்டும் எனவும்,

கடந்தகாலங்களில் இருந்து வந்த அரசியல் பேதங்களை மறந்துதமது கட்சி பூரண ஆதரவு வழங்கும் எனவும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-8)

# பா.உக்களைக் கவனிக்க பாராளுமன்றத்தில் நான்கு கமராக்கள்

(கொழும்பு)

பாராளுமன்ற சபா மண்டபத்தில் இப்பொழுது நான்கு கமராக்கள் இயங்குகின்றன. இதனால் எம்.பிக்கள் தமது நடத்தைகளை நன்கு கவனத்தில் எடுத்துக்கொள்ளுதல் வேண்டும் என்று சபாநாயகர் மைக்கேல் பெரேரா கடந்த செவ்வாயன்று பாராளுமன்றத்தில் விசேட அறிவித்தலொன்றை விடுத்தார்.

இது வரை காலமும் ஒருகமராவே பொருத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. இந்த அறிவித்தலை கேட்ட பொ. ஐ. மு பாராளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பெர்ணான்டோபுள்ளே பாராளுமன்ற நிகழ்ச்சிகளை உடனுக்குடன் தொலைக்காட்சிமூலம் நாட்டுமக்களுக்கு ஒளிபரப்பும் முயற்சியாஇதுஎனகேள்வியெழுப்பியதுடன் பாராளுமன்றத்தில் குழப்பம் நடைபெற்ற ஜூலை 22 ஆம் திகதியன்று எதிர்க்கட்சி எம் பி.க்களின் நடத்தை மாத்திரமேகமராவுக்குள் அகப்பட்டிருந்தது என்று குறிப்பிட்டபோது இது நேரடி ஒளிபரப்பு அல்ல என சபாநாயகர் பதிலளித்தார். (உ)

## விளையாட்டுப் போட்டிகள்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை தம்பாட்டி காந்திஜி சனசமூக நிலையத்தின் 37 வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு சனசமூக நிலையமும் விளையாட்டுக்கழகமும் இணைந்து பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை நடத்தவுள்ளன.

மேற்படி காந்திஜி விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்படவுள்ள தீவகமட்டத்திலான உதைப்பந்தாட்டப் போட்டி இன்று சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து தீவகமட்டத்திலான மென்பந்து துடுப்பாட்டம், தாச்சிப்போட்டி, கரப்பந்தாட்டம் என்பனவும் இடம்பெறவுள்ளன. (உ-75)

# ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் அவசியம்

## சமாதான ஒத்துழைப்புக்குழு கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் அடுத்த மாதம் தாய்லாந்தில் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது என்பதில் இணக்கம் கண்டுள்ளமையை சமாதான ஒத்துழைப்புக் குழு வரவேற்றுள்ளது.

இது குறித்து இக்குழு நேற்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில்:

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நிரந்தர போர் நிறுத்தம் ஏற்பட்டதையடுத்து நாட்டில் துப்பாக்கிகளுக்கு ஓய்வு கிடைத்துள்ளது.

சமாதான நடைமுறைகள் தொடர்பாக அரசுக்கும் புலிகளுக்கும் இடையே கருத்தொற்றுமை ஏற்பட வேண்டும்.

அத்துடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும் இடையில் நல்லுறவைப் பேணக் கூடிய வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று ஏற்படுவது அவசியமென்றும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### பேச்சுக்கான...

பாராளுமன்றத்தில் 113 ஆசனங்களை பெறும் வாய்ப்பு உள்ள போதிலும் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிப்பதனால் தாம் அதனைக்குழப்ப விரும்பவில்லை என்றும் பெரும்பான்மையைப் பெறும் முயற்சியில் தாம் ஈடுபடவில்லை என்றும் கூறினார். (இ-5)

### வன்னி...

பதற்கு சொந்த இடங்களுக்குச் செல்ல முடியும்.

கடல் போக்குவரத்தில் ஈடுபடும் படகுகள், வள்ளங்கள் பயணத்திற்கு முன்னர் சோதனையிடப்படும்.

அத்துடன் போராளிகள் பயணம் செய்யும் ஒவ்வொரு படகிலும் கண்காணிப்புக்குழு உறுப்பினர் ஒருவரும் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆயுதங்கள் எதுவும் இன்றி நிராயுத பாணிகளாகப் பயணம் செய்யும் புலிப்போராளிகள் பகல் வேளைகளில் மாத்திரம் பயணம் செய்ய முடியும்.

இவர்களின் பாதுகாப்பிற்கும் படகோட்டியின் பாதுகாப்பிற்கும் என ஒரு துப்பாக்கியை மாத்திரம் படகோட்டி வைத்திருக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடல் வழிப்பயண ரீதியில் புலிப்போராளிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் மேற்கொள்ளவுள்ள முதலாவது கடற்பயண நடவடிக்கை முல்லைத்தீவு - மட்டக்களப்புக்கு இடையேயான கடல்வழிப் பயணமாகும்.

இதேவேளை கடற்பயண நடவடிக்கைகள் அரசுக்கும் விடுதலைப்புலிகளிற்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமையவே இடம்பெறவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

### ஜப்பானிய...

ஜப்பான் நிதிநிறுவனப் பிரதிநிதிகளான நிக்கே கமிஜொசிகாறோ, மொதகோகனமாறா ஆகியோருடன் ஜப்பானிய வங்கிப் புள்ளிவிபர அதிகாரிகளும் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

இவ் நிதிநிறுவனக் குழுவினர் யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசத்திற்கு விஜயம் செய்து மீனவர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொண்டனர். (இ-4)

### தாய்லாந்து...

இரண்டு தசாப்த காலமாக இலங்கையில் நடைபெற்றுவரும் யுத்தத்திற்கு முடிவு கட்டும் வகையில் நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் ஆரம்பிக்கப்படவுள்ள இந்த நேரடிப் பேச்சுவார்த்தையினை உறுதியான முறையில் தாம் ஆதரிப்பதாக அமெரிக்க இராஜாங்க அமைச்சின் பிரதிப்பேச்சாளர் பிலிப் றீக்கல் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கை வரவுள்ள அமிடேல் தற்போது முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகள் குறித்து ஆராயவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவில் உயர் மட்ட அதிகாரியான இவர் முன்னரும் ஒரு முறை இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# பரீட்சை முடிவுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரி இறுதிப் பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாகின. பரீட்சை முடிவுகளை உள்ளகப் பயிற்சி மாணவர்கள் இன்று காலை 10 மணிக்குப் பின்னர் பீடாதிபதி அலுவலகத்தில் பார்வையிடலாம் என்று பீடாதிபதி கலாநிதி கமலநாதன் தெரிவித்துள்ளார். (ந-5)

### காணாமல்...

பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகளை சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்றனர்.

பூசாவில் தமிழ் அரசியல் கைதிகள் எவரும் இல்லை, களுத்துறையில் தண்டனை பெற்ற 19 கைதிகளும், 154 விசாரணைக் கைதிகளும் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கத்தினர் வெலிக்கடை, நீர்கொழும்பு, மகசின் ஆகிய சிறைச்சாலைகளுக்குச் சென்று தமது உறவுகளை தேடவுள்ளனர். (இ-5)

### தவறணை...

இதனைத் தொடர்ந்து ஏனைய 5 கடற்படையினரும் ஒவ்வொருவராக என்னைத் தாக்கினர். பின்னர் தவறணைக்குள் என்னைத் தள்ளிச் சென்றனர். கள் அருந்துவதற்காக வந்து நின்றவர்களையும் தாக்கினர்.

கள்ளை எனது தலையின் மீது ஊற்றி நிலத்தில் உருட்டி உருட்டி அடித்தனர். கடற்படையினரில் ஒருவர் சப்பாத்து காலினால் எனது முகத்தில் உதைத்தார். இதனால் எனது முகத்தில் இருந்து இரத்தம் கொட்டியது. இதன் பின்னரும் கடற்படையினர் ஒவ்வொருவராக மாறி மாறித் தாக்கினர் இதனால் நான் சுயநினைவிழந்தேன்.

இதேவேளை தவறணையில் நின்றிருந்த வேலாயுதம் இராசரட்ணம் (வயது 60) என்பவரை கடற்படையினர் தக்கியதுடன் அவரை அங்கிருந்த கிணற்றுக்குள் தூக்கிப் போட்டனர். பின்னர் அவர் ஒருவாறு கிணற்றிலிருந்து வெளியேறி வந்து எமது சங்கத்தின் இணைப்பொறுப்பாளர்

# பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நேற்று திருமலைக்கு விஜயம்

(திருகோணமலை)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மற்றும் ஏனைய அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் எனப் பெருமளவானோர் நேற்று திருகோணமலை நகருக்கு சென்றுள்ளனர்.

பிரதமர் மற்றும் அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களின் வருகையால் நகரம் விழாக்கோலம் பூண்டிருந்தது.

திருமலை நகரில் நடைபெற்ற பலவேறு நிகழ்விலும் கலந்து கொண்ட பிரதமர் உள்நாட்டு வெளிநாட்டு கைத்தொழில் முயற்சியினரால் ஏற்படுத்தப்பட்ட 'யுகதக்கம்' எனும் கைத்தொழில் கண்காட்சியில் கலந்து கொண்டு அதனை ஆரம்பித்து வைத்தார்.

திருகோணமலை மக்ரேசர் விளையாட்டரங்கில் ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாடு இடம்பெற்றது.

இதேவேளை திருமலை சீனக்குடாவில் அஸ்ரப் இறங்கு துறையை பிரதமர் விக்கிரமசிங்கா திறந்து வைத்தார்.

அத்துடன் புதிய தபாலகம் ஒன்றும் ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரினால் திறந்து வைக்கப்பட்டது. (இ)

### விமான...

1993ம் ஆண்டு இலங்கை விமானப் படையின் பயன்பாட்டுக்காக 350 கோடி ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்டது.

இதேவேளை விபத்துப்பற்றிய ஆரம்ப விசாரணைகளின் படி எஞ்சினில் தீ பரவியதாலேயே விபத்து இடம் பெற்றதாக அறிவிக்கப்படுகிறது.

### புலிகள் மீதான...

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்:

சமாதானப்பேச்சுக்களின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டே புலிகள் மீதான தடையை நீக்கவேண்டும். அதற்கு முன்னர் அவசரப்பட்டு தடையை நீக்கக் கூடாது என்று கூறினார்.

ஜனாதிபதியின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்துகின்ற பிரேரணை, மனச்சாட்சிக்கு அமைய வாக்களிக்கின்ற பிரேரணை ஆகியவற்றை முடிந்தால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்குமாறும் மங்கள சமரவீர சவால் விடுத்துள்ளார்.

இதேவேளை தாய்லாந்துப் பேச்சுவார்த்தை குறித்த விபரங்களைப் பகிரங்கப்படுத்த வேண்டும். என்று சமரவீர அரசைக் கோரியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் 1999ம் ஆண்டு நடாத்திய இசை நாடக நாட்டுக்கூத்து, கிராமியக் கலைகளுக்கான போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான

**பரிசளிப்பும் கலைஞர் கௌரவிப்பு விழாவும் - 2002**

தலைவர் : வைத்தியகலாநிதி வை.தியாகராஜா.
இடம் : யா/ இந்து மகளிர் கல்லூரி
காலம் : 18-08-2002 - ஞாயிறு மு.ப.9.30.

முதன்மை விருந்தினர்
பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
(துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்கள்
உயர் திரு.து.வைத்திலிங்கம்
(மேலதிக அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)
பேராசிரியர் அ.சண்முகதாதஸ்
(தலைவர், தமிழ்த்துறை - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
உயர்திரு. சி.சிவராசா
(மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்)
இளம்பரிதி -அரசியல்துறைப் பொறுப்பாளர்
(தமிழீழ விடுதலைப் புலிகள்-யாழ்.மாவட்டம்)

**கௌரவிக்கப்படும் மூத்த கலைஞர்கள்**

மருதங்கேணி – திரு.எஸ்.இராசரத்தினம், அம்பன் (இசைநாடகம்)
பருத்தித்துறை – திரு.ச.இராஜதுரை,மாதனை(இசைநாடகம்)
திரு.த.சிவசுப்பிரமணியம்,மாதனை
(காத்தவராயன் கூத்து)

**கண்ணீர் அஞ்சலி**

வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும்,மாவிட்டபுரத்தை வதிவிடமாகவும், தற்பொழுது கனடாவில் வசித்தவருமான

**இராமலிங்கம் சிற்சபேசன்**

அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைகிறோம். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குவதுடன, அவரது மறைவால் துயரடைந்திருக்கும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மாவை கைத்தொழில் நிலையம்
உரிமையாளர்
சோ. புவனேந்திரன்.

மாவிட்டபுரம் தெற்கு,
தெல்லிப்பழை. [5829]

மாவிட்டபுரம் தெற்கு,
தெல்லிப்பழை. [5829]

மாவை கைத்தொழில் நிலையம்
உரிமையாளர்
சோ. புவனேந்திரன்.

## இதய அஞ்சலி

மல்லாகம் மகா வித்தியாலய அசிரியர்
திரு.நா.தவக்குமார் அவர்களின்
அன்புத் தந்தையார்

ஆயுர் வேத வைத்தியர்

**கணபதிப்பிள்ளை நாகலிங்கம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எங்கள் இதயபூர்வமான அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகத்தினர்
மல்லாகம் மகா வித்தியாலயம்

[C/4861]

## ஸ்ரீ முருகன் பாமாலை வெளியீடு

ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் தேர்
உற்சவத்தன்று ஸ்ரீ முருகன் பாமாலை வெளியிடப்படும்

(கையடக்கப் பதிப்பு)

–செயலாளர்–

ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்
பருத்தித்துறை

[C/4860]

ருந்த கிணற்றுக்குள் தூக்கிப் போட்டனர். பின்னர் அவர் ஒருவாறு கிணற்றிலிருந்து வெளியேறி வந்து எமது சங்கத்தின் இணைப்பொறுப்பாளர் தீயோகு அன்ரனியிடம் சம்பவத்தை தெரிவித்தார் இதை அடுத்து அவர் பிற்பகல் 4மணியளவில் சம்பவ இடத்திற்கு வந்து என்னை மீட்டுச் சென்றார். பின்னர் விடுதலைப்புலிகளின் தீவக அரசியல் பொறுப்பாளர் செம்மணனிடமும், உறுப்பினர் பாப்பாவிடமும் இது பற்றி நாம் முறையிட்டோம். இச்சம்பவத்தில் ஈடுபட்ட கடற்படையினரில் 4பேர் நாரந்தனை கடற்படை முகாமைச் சேரந்தவர்கள் ஏனைய இருவரும் புளியங்கூடல் கடற்படை முகாமைச் சேர்ந்தவர்கள் இவர்களை என்னால் அடையாளம் காட்ட முடியும் என்றும் ரவீந்திரகுமார் கூறினார்.

இச் சம்பவம் தொடர்பாக யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், அங்கவீனமுடைய இவர் 4மாதங்களுக்கு முன்னரே வன்னியில் இருந்து வந்தவர் என்றும் குறித்த கள்ளுத்தவறணையில் இருந்து 4ஆயிரத்து 600 ரூபா கடற்படையினரால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதுடன் 10ஆயிரத்து 700ரூபா வரை நிறுவனத்துக்கு நட்டம் ஏற்பட்டுள்ளதாகவம் சங்கப் பொது முகாமையாளர் ம.யோகராசா தெரிவித்தார்.

கடற்படையினரால் தாக்கப்பட்ட தவறணை முகாமையாளர் விடுதலைப்புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் துறை அலுவலகத்தில் தஞ்சமடைந்துள்ளார்.

| | |
|---|---|
| மருதங்கேணி | – திரு.எஸ்.இராசரத்தினம், அம்பன் (இசைநாடகம்) |
| பருத்தித்துறை | – திரு.ச.இராஜதுரை,மாதனை(இசைநாடகம்) |
| | திரு.த.சிவசுப்பிரமணியம்,மாதனை (காத்தவராயன் கூத்து) |
| | கலாபூஷணம் வே.க.பாலசிங்கம், பொலிகண்டி (இசைநாடகம்) |
| | திரு.பா.வேதநாயகம்,தும்பளை(நாட்டுக் கூத்து) |
| கரவெட்டி | – திரு.கே.எஸ்.சந்திரன்,கரவெட்டி(இசை நாடகம்) |
| | – திரு.ஏ.வீ.வேலாயுதம்.கரவெட்டி(இசை நாடகம்) |
| சாவகச்சேரி | – திரு.வீ.காசிநாதன்,மிருசுவில்(இசை நாடகம்) |
| கோப்பாய் | – திரு.வே.சிதம்பரநாதன், நீர்வேலி (காத்தவராயன் கூத்து) |
| நல்லூர் | – திரு.பெரி.பிச்சையப்பா(முகவீணை) |
| | நவாலியூர்,கலாபூசணம் நா.செல்லத்துரை, (மரபுக்கலை) |
| | திரு.எஸ்.பொன்னுத்துரை,அரியாலை (மரபுக்கலை) |
| | கலைப்பேரரசு ஏ.ரீ.பொன்னுத்துரை (தாளக்காவடி) |
| யாழ்ப்பாணம் | – திரு.அ.மனோகரன், குருநகர் (நாட்டுக் கூத்து) |
| ஊர்காவற்துறை | – திரு.நா.தாமோதரம்பிள்ளை,தம்பாட்டி (நாட்டுக் கூத்து) |
| வேலணை | – திரு.ந.தங்கவேலு (சிந்துநடைக் கூத்து) |
| நெடுந்தீவு | – திரு.வே.மாணிக்கம்(நாட்டுக் கூத்து) |
| உடுவில் | – திருமதி.சந்திரா சரவணமுத்து, இணுவில் (இசைநாடகம்) |
| | திரு.மு.கோபாலரத்தினம், சுன்னாகம் (இசை நாடகம்) |
| தெல்லிப்பழை | – திரு.க.உருத்திராபதி(இசை நாடகம்) |
| | திரு.சரோன் பாக்கியநாதன்,உதயபுரம்,பலாலி (நாட்டுக் கூத்து) |
| சண்டிலிப்பாய் | – திருமதி.தேவராணி,(நாட்டுக் கூத்து) |
| சங்கானை | – திரு.ந.சிவசண்முகமூர்த்தி,சுழிபுரம் (நாட்டார் பாடல்) |
| பளை | – திரு.க.ஆறுமுகம் (சிந்துநடைக் கூத்து) |

***அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.***

–விழாக்குழு–

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில 17.08.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.